உ

பரமபதி துணை.

மகாமகத்துவம்பொருந்திய

# அகஸ்தியர்

புலஸ்தியருக்கு உபதேசித்த

# தற்க சாஸ்திரம் 300.

555/(67)/ / அ. தற்க. சாஸ்திரம்,

அகத்தியர் தற்க சாஸ்திரம் 300

பக்கம் 79



குரு. இராமசாமிக்கோன் (இ. ராம. கு...

புக்செல்லர், ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பி...,

கிர். 4. குருசாமிக்கோனர் சந்து,

வடக்குமாசிவீதி மதுரை.

[பதிப்புரிமை] [விலை ரூ. 2-50]

உ

பரமபதிதுணை.

மகாமருத்துவம் பொருந்திய

# அகஸ்தியர்

# புலஸ்தியருக் குபதேசித்த

# தற்க சாஸ்திரம் 300.




மதுரை வித்துவான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதித்தபடியுள்ளது.



உரிமையாளர்:-

## ஜி. இராமசாமிக்கோன்

புத்தகசாலை நிர் 4, குருசாமிக்கோனார் சந்து

வடக்குமாசிவீதி, மதுரை.



காப்பிரைட்.



1963. விலை ரூ: 2—0—0

மதுரை வடக்குமாசி வீதி, குருசாமிக்கோனர் தெரு,
ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது. 1963.
காப்பி 500, மூன்றாம் பதிப்பு.

உ

பூரணமே ஜெயம்.

சித்தர்கள் பரிபாஷை விளக்கமென்னும்

# அகஸ்தியர் புலஸ்தியருக் குபதேசித்த

# தற்க சாஸ்திரம்.

## காப்பு.

தேனென்ற மொழியுடையாள் பாதம்போற்றி
 தெளிவான மூல தரு பாதம்போற்றி
தானென்று சொன்னதொரு குருவைப்போற்றி
 தரணிமுத லீராறு சமையம்போற்றி
ஞானென்ற பஞ்சகர்த்தாள் பாதம்போற்றி
 பண்பான பதினெண்பேர் பாதம்போற்றி
ஞானென்ற வல்லபையாள் பாதம்போற்றி
 மயங்காமற் சொல்லுகிறேன் மகிழ்ந்துகேளே. (1)

மகிழுதற்கு யிந்நூலை மகிழவேணும்
 மற்றொன்றைப் போலல்ல யிந்நூல்தான்
மகிழ்ந்தவற்குத் தாய்பதத்தைப் போற்றிசெய்து
 மகாதற்கம் முன்னூறும் மூவெட்டுந்தான்
மகிழ்வதற்கு ஆராய்ந்து சொன்னேன் யானும்
 அம்பலத்தி லாடுகிற அய்யர்தாமும்
மகிழ்வதற்காய் யெந்தனுக்குச் சொன்னாரப்பா
 மக்களுக்காய்ச் சொல்லுகிறேன் தற்கம்பாரே. (2)

பார்க்கையிலே பழம்பொருளைப் பார்க்கவேணும்
பதியிருந்து மூலத்தைக் காணவேணும்
ஆர்க்குமே அடிதொழுது வணங்கவேணும்
ஐந்தெழுத்தின் குறிப்புதனை யறியவேணும்
ஏற்கவே யிந்நூலைப் புகழவேணும்
யெதிர்த்தொன்று மெண்ணும விருக்கவேண்டும்
மார்க்கமுட னின்னூல்வைத் திருந்தோர்பாதம்
மைந்தனே தொழுதிறைஞ்சி வாங்குவாங்கே. (3)

வாங்கவே யின்னமொன்று சொல்லக்கேளு
வழிமறித்துப் பொருள்பறிக்கும் சண்டாளர்க்கும்
பாங்கான வார்த்தைகளைச் சொல்லவேண்டாம்
பழிபாவம் வந்துவிடுஞ் சொன்னேனப்பா
நீங்காமல் பெருவழியே நடக்கவேணும்
நிலையில்லாக் காரியத்தை மறக்கவேணும்
ஆங்காரந் தனைமறந்து யென்நூல்பார்த்தால்
அப்பவல்லோ அறிவுகுரு வாகுந்தானே. (4)

தானவனாய் நின்றகுரு தன்னைப்போற்றித்
தற்கமிட்டுச் சாமிபதம் பணிந்துகொண்டு
கோனவனாய் நின்றபரா பரத்தின்பேரும்
கொடுமுடிமுப் பத்திமூன்றுந் தேவர்பேரும்
கானவனாய் நின்றகுரு நாதன்பேரும்
நன்மைசெயுஞ் சீஷருட பேருஞ்சொல்லும்
தேனான மொழியுடையாள் பூஜைசொல்லும்
தேசத்தோர் செய்தர்மஞ் செப்புவீரே. (5)

செப்புதற்கு யின்னமொன்று சொல்லக்கேளு
ஜெகஜாலச் சூத்திரன வாழ்க்கைப்பேரும்
அப்புதற்கு உரைசொல்லும் மார்க்கஞ்சொல்லும்
அந்தந்தச் சாதிகுலம் வகுத்துச்சொல்லும்
மப்பொருதி நின்றதொரு தனுவின்பேரும்
மரங்கள்மலை கெவிகள்பல சீவன்பேரும்
அப்புறத்துக் கப்பால்நின்ற ததுவுஞ்சொல்லும்
ஆதியோ டந்தவரை சொல்லுவீரே. (6)

சொல்வதற்கு யென்குருவே சாமிநாதா
தொல்புவியில் ஜோஸியங்கள் பார்ப்பதென்ன
வெல்வதற்கு வேதமென்று சொல்வதென்ன
வேதனங்கே குடியிருந்த விபரஞ்சொல்லும்
அல்லுதற்கு அச்சுதனும் பிறந்ததெங்கே
ஆயிரத்தெட் டண்டமுத லானதெங்கே
கல்லுதற்குக் கார்மேக மானதெங்கே
கண்களிக்க யெந்தனுக்குக் காட்டுவீரே. (7)

காட்டுதற்கு யின்னமொன்று சொல்லக்கேளும்
கதிர்மதியும் ராகுமுத லானபேரும்
பூட்டுதற்குத் திறவுகோல் தந்தாப்போல
பூமலர்கள் பூந்தவகை புகலவேணும்
நாட்டுதற்கு யென்குருவே நடக்கைசொல்லும்
நற்புருடன் பெண்டீரின் வாழ்க்கைசொல்லும்
கூட்டுதற்குக் குருமொழியின் பெயரைச்சொல்லும்
கூசாமல் நானடியேன் தொழுதேனய்யா. (8)

தொழுவதற்கு யின்னுமொன்று சொல்லவேணும்
தோகைமயி லானதொரு விபரஞ்சொல்லும்
புகலுதற்குப் பூமியைந்து மானவாறும்
பூதலத்தில் மலரைந்து மானவாறும்
நவிலுதற்குக் கனிவர்க்க மானவாறும்
நால்சாதி ஆண்பெண்பதி னெட்டின்பேரும்
பழுதறவே யெந்தனுக்குச் சொல்லவேணும்
பாபரத்தி னடிதொழுது பணிந்தேனையா. (9)

அய்யனே யென்குருவே சாமிநாதா
அந்தரத்தில் மச்சங்கள் வந்ததேது
கய்யாறு ரெண்டுசிர மானோனுக்குக்
கலியாண மானவகை விபரஞ்சொல்லும்
பய்யரவந் தணையுணர்ந்த யீசனரும்
பதியிழந்த மார்க்கமதைப் பகரவேணும்
மெய்யாக யெந்தனுக்குச் சொல்லவேணும்
யென்குருவே தேசிகனே ஐயாஐயா. (10)

குருவிருந்த ஆசனத்தின் பெயரைச்சொல்லும்
கூசாமல் நற்காலின் விபரஞ்சொல்லும்
மருவுயர்ந்த புலித்தோலின் பெயரைச்சொல்லும்
மானன ஆசனத்தின் பெயரைச்சொல்லும்
பருவமுடன் பதினெண்ஜாதி தொழிலைச்சொல்லும்
பாருலகின் நடத்தையெலாம் பகுந்துசொல்லும்
அறிவில்லா நானடியேன் கேட்கவந்தேன்
அருள்செய்ய வேணுமையா சாமிநாதா. (11)

வேணுமென்று கேட்கவந்த சுந்தரமேஅய்யா
வேலவனா ரெந்தனுக்கு விளம்பினர்காண்
வேணுமென்று சாங்காலம் தனையறிந்து
வேதாந்தப் பெருவெளியைக் காணவேணும்
காணுதற்கு யென்குருவைக் காணவேணும்
கலந்துநின்ற கோனவனே தேவனப்பா
பூணுதற்குக் குருவினுட பெயரைக்கேளு
புகழ்சொன்ன தெய்வமடா புகழ்ந்துபாரே. (12)

பாரேநீ உலகத்திற் சீஷர்தானும்
பரத்தினுட பிள்ளையடா யகர்ந்துபாரு
காரேநீ குருபதத்தைச் சுந்தரமேஐயா
கருத்திலே தோணுமடா கண்டுபாரு
பேரேநீ மறந்தாக்கால் பூஜையில்லை
பேச்சென்ற மார்க்கமடா பூஜையாச்சு
சேரேநீ ஒருவருடன் சொல்லவேண்டாம்
ஜெகஜால மர்மமென்று சொல்லுவாரே. (13)

சொல்லுதற்குப் பலவிதங்கள் சொல்லுவார்கள்
தோகையரைச் சேர்வதெல்லாங் கருமமப்பா
வெல்வதற்கு வேதாந்தம் விள்ளவேணும்
வேதனுட வாழ்க்கையடா விரும்பிப்பாரு
நல்லுதற்கு நின்றதொரு மார்க்கங்கேளு
நலம்பெற்ற மார்க்கமடா நயந்துபாரு
கல்லுதற்குக் கபடம்வைத் தவனேகள்ளன்
கசுமாலம் மட்டையடா கடையன்தானே. (14)

கடையனப்பா கசுமால மட்டிமாண்பர்
கண்கெட்ட மூதேவி கழுதையாகும்
மடையனவன் பொருள்கேட்டுத் தற்கஞ்செய்வான்
மாண்பரவர் தன்குணத்தால் நரகில்வீழ்வார்
இடையனென்றால் குணங்குறிபி விடையனப்பா
பில்லாட்டா லிடையனென்ற நாமமேது
தடையில்லா வார்த்தையினால் பசப்புகின்ற
சகசண்டி மாண்பர்களைத் தள்ளுதள்ளே. (15)

தள்ளுதற்கு விபரமினிச் சொல்லக்கேளு
தருதலையோ டிணங்காதே தாயைப்போற்று
நில்லுதற்கு நிலைச்சார்பு கண்டாலப்பா
நிச்சயமாஞ் சாதிகுலங் காணலாகும்
சொல்லுதற்குத் தூலமடா அஞ்சுமாச்சு
சொற்பெரிய சீவஜெந்து யிதுக்குள்ளாச்சு
கல்லுதற்கு மப்பால்நின் றெழுத்துமாச்சு
காசினியியோர் தான்பிழைக்கப் பிழைப்புமாச்சே. (16)

பிழைப்பதற்கு வேதமடா நாலெழுத்து
பேசுதற்கு விபரமப்பா பேணிப்பாரு
கலப்பதற்குப் பெண்ணாகப் பிறந்தமால்தான்
கன்னியிடம் பிறந்தான்காண் கண்டுபாரு
மலப்பதற்கு மாலாகப் பிறந்தாளாத்தாள்
மங்கையடா யேரிளம்பெண் பருவமானாள்
தலைப்பொரியே ஆயிரத்தெட் டண்டமாச்சு
தலைவனென்ற நவக்கிரகம் விபரங்கேளே. (17)

விபரமென்ன அஞ்சட்னே மூன்றுங்கூடி
விதமான ரெண்டதுவு மதனிற்கூடில்
அகரமென்ற அஞ்செழுத்து அஞ்சுங்கூடி
ஆதியாய் நின்றதடா அறிவுள்ளோனே
மகரமென்ற ராசிமுதற் பன்னிரெண்டும்
மார்க்கமடா அவரிருக்கும் வீடதப்பா
சிகரமென்ற கோபுரத்தில் வைத்தாப்போலே
சிஷருக்காய்ச் சொல்லிவிட்டே னிந்நூலே. (18)

இந்நூல் வைத்திருந்தோர் பாதந்தன்னை
யியல்பாகத் தொழுதிறைஞ்சி வாங்கவேணும்
கந்தனுட பூஜையிலே கலக்கவேணும்
கருத்திலே தியானம்வைத்துக் கருதவேணும்

யெந்தனுட நூல்தனைப் படிக்கவேணும்
யேதேது கேட்டாலுங் கொடுக்கவேணும்
சொந்தமுடன் பூஜித்த சுந்தரமேஅய்யா
சொல்லுவதற் கின்னமுண்டோ சொல்லுசொல்லே. (19)

சொல்லுதற்கு யின்னமுண்டு சொல்லக்கேளு
தொல்புவியில் ஞானமென்றால் மார்க்கமாச்சு
வெல்வதற்கு வசியமடா கலைமானாகும்
வேதாந்த மென்பதுவுங் கலைகளாகும்
கல்வதற்குக் கல்வியடா ஞானமார்க்கம்
கலங்தேற வழிசொல்வேன் கேளுகேளு
பல்லுறவாய் நின்றதொரு பயல்கள் தன்னைப்
பலநாளும் நம்பாதே பாழில்வீழ்வாய். (20)

பாழான மாய்கைதனைத் தள்ளவேணும்
படுகுழியில் வீழாம லிருக்கவேணும்
கோளான ஐம்புலனைக் காணவேணும்
கொடியசிவ யோகியென்று திரியவேணும்
நாளான நாளறிந்து நடக்கவேணும்
நல்லசிவ பூஜையிலே நிற்கவேணும்
காலான காலறிந்தா லவனேசித்தன்
கசுமாலர்க் கென்னூலைக் காட்டொண்ணாதே. (21)

காட்டாதே யென்றுரைத்த குருவேஅய்யா
காசினியிற் கம்மாளற் கருத்தைச்சொல்லும்
வெட்டாத மேழியதன் பெயரைச்சொல்லும்
வேளாளர் வந்தவகை விபரஞ்சொல்லும்
தீட்டாத சாலியன்றன் நடக்கைசொல்லும்
நலமான பாவுடைய பேரைச்சொல்லும்
தேட்டாத தேட்டெல்லா மிதுக்குள்சொல்லும்
ஜெகத்குரு வானவகை செப்புவீரே. (22)

செப்புதற்கு வேளாளன் பூமிபாலன்
ஜெகதலத்தோர் போற்றுகின்ற தெய்வமாசான்
ஒப்புதற்குக் காராள னவனேயாச்சு
ஒண்டொடிக்குப் பிள்ளையவன் உகந்தியாரு
மெப்புதற்கு அவன்பிள்ளை கம்பியனேயாகும்
மேதினியி லெங்ஙெழுத்தும் கலப்பையாச்சு
தப்புதற்குச் சாலியரே வண்ணாராச்சு
தையலர்க ளெல்லோரும் பரத்தைமாரே. (23)

பாருமென்று சொல்லிவந்த குருவேஅய்யா
பார்தனிலே தேவஸ்தல மானவாரும்
பேருடனே பிரபலமா யெனக்குச்சொல்லும்
பேச்சறிந்த பாத்தையர்கள் வந்தவாறும்
காருடனே காளையுமே வந்தவாறும்
கைக்கோள ரவர்கள்கலை செய்தவாறும்
சீருடனே யெந்தனுக்குச் செப்பவேணும்
சிவதவமே யென்குருவே சாமிநாதா. (24)

தானென்ற தெய்வதலஞ் சொல்லக்கேளு
தக்கனுட யாகத்திற் பிறந்தாளாத்தாள்
மானென்ற விழியுடைய சிறுபெண்ணாத்தாள்
மாரியென்றே அவனிடத்தில் வந்தாளப்பா
ஆணென்றும் பெண்ணென்றும் பிறந்தாளாத்தாள்
அஞ்சுபஞ்ச பூதமடா ஆலயமேயாச்சு
தேனென்ற மொழிபாத்தை பரத்தில்நின்று
திருஷ்டிப்பி லேபிறந்த புலைச்சியாகும்
கோனென்ற கோபாலன ரிஷபமாச்சு
கொம்பிலெழுங் கணுவல்லோ ருத்திரனுச்சே. (25)

காருநீ குருபதத்தைக் கருணையாகக்
கைக்கோள னென்றுக்கால் கார்மேகமாச்சு
பாருநீ யின்னமொன்று பகரக்கேளு
பரமசிவ மெந்தனுக்குப் பகர்ந்தவார்த்தை
பேருநீ ஆசனத்தின் பேரைக்கேளு
பிறந்தமகா மேருவென்று பேருமாச்சு
மாமேரு குருவிருந்த பீடமப்பா
மாசற்ற சுந்தரமே மகிழ்ந்துகாணே. (26)

சுந்தரமே யென்குருவே சாமிநாதா
சூதான பஞ்சகர்த்தா விருந்தவீட்டில்
அந்திரத்தே மணியசைக்கும் ஸ்தம்பப்பேரும்
அரிகாவி லசைவுபூ பாலர்பேரும்
மந்திரத்தாற் சலந்திரட்டுங் கலசப்பேரும்
மணிச்சங்கு நிரையோசை யெனக்குச்சொல்லும்
தந்திரத்தால் நீரையள்ளி யிறைப்பதென்ன
தற்கமிட்டு நானடியேன் கேட்கவந்தேன். (27)

வந்தென்னைக் கேட்கவந்த சுந்தரமே அய்யா
வாசல்முன்னே நின்றதுவு மாயனாகும்
அந்தமுடன் வேதமடா அறிவதாச்சு
ஆத்துநின்ற கணேசனப்பா யிலையோனாச்சு
மைந்தரவ ரிருவருமே கார்த்தபின்பு
மார்க்கமுடன் சலமெடுக்குங் குடத்தைக்கேளு
அந்தரத்தே அமுதம்வைத்த கலசமாச்சு
அம்மையெனும் பார்பதியா ளதுவுமாச்சே. (28)

அதுவென்ன ஆரணிந்தோ ரெனக்குச்சொன்னார்
அங்கேநீ ரிறைத்ததுவுஞ் சக்கரமேயாச்சு
மதுவென்ற தேனையுண்டு மயங்கிடாதே
மசடென்ற பாதமதை மனதில்வைத்து
இதுவென்ன யெதுஉலகில் நினைத்தீரா லுந்தான்
யிகபரமுங் கிடையாது நரகில்வீழ்வாய்
பதியென்ன பதிகிடைக்கச் சொல்லக்கேளு
பாருலகில் பாதகர்க்குக் காட்டிடாதே. (29)

காட்டவே கானமயில் பேரைக்கேளு
கற்பத்தோ னென்றுமதைக் கூறலாகும்
பூட்டவே பூமியஞ்சு பஞ்சபூதம்
பூவைந்து புலனைந்துஞ் சமிதானப்பா
நாட்டவே நால்ஜாதி விபரங்கேளு
நற்பிரம னரசவசிய சூத்திரனாகும்
ஆட்டவே நால்ஜாதி நால்வேதமாச்சு
அரிஅரப் பிரமாதி யவரேயாச்சே. (30)

ஆச்சென்று சொல்லவந்த குருவேசாமி
அவனிதனிற் தேவர்களை யறிந்துசொல்லும்
பேச்சென்ற மந்திரங்கள் பிறந்ததிங்கே
பேயனென்று பேருலகில் வந்ததேது
காச்சென்ற தேங்கனியின் பேரைச்சொல்லும்
கதலியுட பழப்பேரு கனிந்துசொல்லும்
மூச்சென்று மருள்பிடித்துத் திரிவதென்ன
மூதாக்கா ளென்பதுக்கு வகைசொல்வீரே. (31)

முறையென்ன தேவருக்கும் முனிவருக்கும்
மூச்சென்ற மந்திரமே அதர்வணமாகும்
துறையென்ன அவர்களிடம் பிறந்ததப்பா
கலந்தேக வழிதாஞ் மடையரப்பா

திறையென்ன நவக்கிரகம் மருளதாச்சு
தீர்க்கமுட னிதையறிந்தோ னவனேசித்தன்
பறையென்ற பராபரையா ளெவர்க்குத் தெய்வம்
பரிவாகக் கண்டறிந்து பாருமாரே. (32)

பாரேநீ முனிவரென்றால் முனிவரல்ல
பாருலகிற் றாட்சியடா யிறந்துபோனால்
தேரேநீ தேவரென்று தொழுதாயானால்
ஜெகதலத்தி லெல்லோருந் தொழுவாரப்பா
ஆரேநீ உண்டென்று நினைத்தபோது
அவர்கள்செய்யுந் தொழிலெல்லாம் நடக்கும்பாரு
வாரேறும் பூமுலையாள் சத்திதானும்
வந்தவர்க்கு வரங்கொடுக்குஞ் சத்தியாச்சே. (33)

சத்தியமாய்ச் சொல்லுகிறேன் சுந்தரமே அய்யா
சராசரங்கள் செய்வதெல்லா மரமேயாச்சு
பத்தியாய்த் தேன்கனியின் பெயரைக்கேளு
பாருலகிற் றென்னவனே தேங்காயாகும்
முத்திபெற்ற பெண்ணல்லோ கதலியாச்சு
மூதுலகில் மதுவல்லோ தேனுமாச்சு
வெத்திகொண்டு யெழுதுதற்கு விபரங்கேளு
வேதாக்தத் துரையல்லோ வேதமாச்சு. (34)

ஆச்சென்று சொல்லவந்த குருவேசுவாமி
அவனிதனிற் சாதியீ ரெட்டென்றேதான்
ஆச்சரிய மெந்தனுக்கு விளங்கவேணும்
மணியுஞ்சே கண்டியுடன் கைமல்லாரி
பேச்சென்ற தொடுசரத்தின் பேரைச்சொல்லும்
தீபமென்ற கற்பூர தீபஞ்சொல்லும்
மூச்சென்ற மூணுமுணுப்பு யெனக்குச் சொல்லும்
மேன்மைகுரு தேசிகரே அய்யேஅய்யே. (35)

தேசிகனே யென்மகனே சுந்தரமேஅய்யா
தேசத்தி லாண்சாதி பெண்பிறந்தப்பா
காசினியிற் கர்மமெல்லாம் பெற்றபிர்மன்
கலைகான்கைச் ஜாதியாய் வகுத்தவாறும்
தபசியென்ற வியாசரல்லோ பதினொலாக்கி
தாரணியிற் பதினெட்டும் பகர்ந்தார்பாரு
பேசியதோர் மணியினுட விபரங்கேளு
பேருலகில் மாதவனே மணியுமாச்சு. (36)

மணியோடு சேகண்டி ருத்ரபீடம்
மானிலத்தி லடக்கைமல் லாரிகேளு
பணிவதற்கு வேதனின்கே விதித்ததப்பா
பலராகத் தேவதுந்துமி யிதுவேயப்பா
கனிவதற் குடக்கையப்பா குறிஞ்சியாச்சு
களரிதனிற் பலராகம் சூதமீச்சு
அணிவதற்குப் பூஷணமா யணிந்தாளாத்தாள்
அவளுடைய கோலமதை யறிந்துபாரே. (37)

அறிந்துபா ரென்றுசொன்ன குருவேஅய்யா
அவனிதனில் பலவிருதின் பெயரைச்சொல்லும்
தெரிந்துமே னடியேன் கேட்பதற்குத்
தெளிவாக யெந்தனுக்குச் சொல்லவேணும்
பரிந்துமே பலபலஆ யுதத்தின்பேரும்
பாரளந்த அரிகைச்சக் கரத்தினபேரும்
அரிந்துமே யெந்தனுக்குச் சொல்லவேணும்
மாசில்லா மணியேயென் குருவேசாமி. (38)

குருவென்று கேட்கவந்த சுந்தரமேஅய்யா
கூறுகிறேன் பலவிருது பெயரைக்கேளு
மருவொன்று மில்லாதா ரெனக்குச்சொன்னார்
மானிலத்தில் திவசமென்று லாதியாச்சு
பருவமென்ற செங்கோலு மிதுவேயாச்சு
பார்தனிலே பிர்மமடா சுந்தரமேகேளு
கருமமென்ற மோகனமே சத்தியாச்சு
தனுவதுவே கண்ணனுடை உடலுமாச்சு
அருவென்ற ஆயுதத்தின் விபரமப்பா
அப்பனே பூவுலகில் அலகையாச்சே. (39)

அலகையென்ற காளியுட் பலகோடாலி
அமர்ந்துநின்ற தோமரமே வன்னியாச்சு
பலகையென்ற கேடையமே சிவாயமாச்சு
மதித்துநின்ற கட்டாரி சத்தியாச்சு
சலகையென்ற வாங்கல்லோ ஒருவனச்சு
ஜெகசாலக் கூத்தல்லோ சிவிகையாச்சு
அலகையென்ற சூலமப்பா மூவராச்சு
அவனியி லேழுமடா தானேவேணும். (40)

வேணுமடா பதினெட்டு விருதுகேளு
மேலான சாமரமே கன்னியாச்சு
தோணுமடா சலவிருது கம்பளியேயாச்சு
தொல்புவியிற் பலவிருது பெயரைக்கேளு
காணுமடா சிலையினொடு அம்புதானும்
கண்ணில்லான் பாசமடா கண்டுபாரு
நாணுமடா சொல்லிவிட்டே னுனக்காயப்பா
நன்மையுடன் பீசமெல்லா மறிந்துகொள்ளே. (41)

பரிந்துநீ கேட்கவந்த சுந்தரமேஅய்யா
பார்தனிலே வெண்டையமோ சிவமுமாச்சு
தெரிந்துகொள்ளு சத்தமடா வாயுவாச்சு
தேசத்தில் விஷ்ணுமய மெல்லாமாச்சு
அறிந்தவனே ஜெகசால மாடவேணும்
அம்பலவ ரெங்கனுக்கு அருளிச்செய்தார்
அறிந்தவனே சிவயோகி யறியவேணும்
அல்லாட்டால் நிர்மூட ரறிந்திலானே. (42)

தானென்ற பாதகர்க்குச் சொல்லவேண்டாம்
தருதலைப் பயல்களைச் சேர்க்கவேண்டாம்
ஊனென்ற மாய்கையிலே சிக்கிமாய்வாய்
உற்றநூ லிதைக்காட்ட வேண்டாமப்பா
மானென்ற விழியுடைய சிறுபெண்ணுத்தாள்
மானிலத்தி லிடர்தவிர்க்க வந்தாளப்பா
நானவளைப் பூஜைபண்ண நினைந்தபோது
நல்விருது பதினெட்டும் பூண்டாள்பாரே. (43)

பாரப்பா யிவளுடைய ரூபமென்ன
பாதகர்க்குச் சொல்லாதே பண்பாய்க்கேளு
ஆரப்பா யெனைப்போலே சொல்லப்போறார்
ஆச்சரியஞ் சுந்தரமே அறிந்துபாரு
ஏரப்பா யிந்தனால் சிவனாலாகும்
பேசாதே வாய்மதத்தாற் பேசினேன்யான்
தேரப்பா கண்டுமனந் தேறவேணும்
தெளிவதற்கு அறிவுகுரு அரகராவே. (44)

அரகரா வென்றதற்குப் பெயர்தானென்ன
அவ்வெழுத்தும் உவ்வெழுத்து மானதெங்கே
பரமான பூஜையெங்கே மூப்பாலெங்கே
பரரபரமாம் பரகெதியும் பரனுமெங்கே

திரமான சைவமெங்கே யோகமெங்கே
சேர்ந்தமதி குறைந்ததெங்கே வளர்ந்ததெங்கே
சரமான சரமெங்கே ஞானமெங்கே
சகலசித்து மறிந்துணர்ந்து சாற்றுவீரே. (45)

சரமான சரமதுவே ஆண்பெண்ணாகும்
சைவமென்றால் மார்க்கமடா சார்ந்துபாரு
ஆரமான தர்மமே அரகராவாகும்
அவ்வெழுத்தும் உவ்வெழுத்தும் விண்மண்ணாகும்
புரமான பூஜையடா சொல்லக்கேளு
பாருலகில் நேமமென்ற மார்க்கமப்பா
பூரமான முப்பாழுஞ் சொல்லக்கேளு
புரிசிவனார் சொன்னபடி நான்சொல்வேனே. (46)

சொன்னபடி சொல்லுகிறே னின்னங்கேளு
சோதிமணி பூரகமே பரகெதியுமாகும்
இன்னபடி யெந்தனுக்கு அரனார்சொன்னார்
பினிக்கேளு சுந்தரமே அய்யாநீயும்
கன்னமிருங் கள்ளருக்குச் சொல்லவேண்டாம்
காசினியில் நிறைந்தமதி குறைந்தவகைகேளு
வன்னமடா யிடகலையும் பின்கலையுமாச்சு
விபரிதமாய்ச் சொல்வதற்குக் குருவைக்காரே. (47)

காருமென்று யெந்தனுக்குச் சொல்லவந்த
காரணமாங் குருவேனென் கண்டுபோற்றி
பூரணமாய் நின்றதுவு மெனக்குச்சொல்லும்
புண்யபவ மென்றதுக்கு நிறந்தானென்ன
பார்தனிலே கவியுரைத்த கவியின்பேரும்
பக்கம்நின்ற சூலகபா லத்தின்பேரும்
ஆணிந்தோன் கையணிந்த உடுக்கைப்பேரும்
அடைவாக யெந்தனக்கு அருள்செய்வீரே. (48)

வீரான உலகத்திற் கோடாகோடி
விதமான மானிடர்க ளனேகம்சொல்வார்
கூரான அஞ்செழுத்தைப் படைத்தயீசன்
கூத்தனல்லால் வேறுமுண்டோ கூர்ந்துபாரு
தாரான அண்டமெல்லாம் நிறைந்தமூர்த்தி
தயாபரனார் திருக்கூத்து ஆடும்போது
பேரான பிரமனுட சிரசிலொன்று
பெலியிறந்த கபாலமடா பேணிப்பாரே. (49)

பாரப்பா பூரணத்தின் விபரங்கேளு
பரிவாகச் சுடரெழுந்து திடரெழுத்துமாச்சு
சேரப்பா புண்ணியமே செய்தவமுமாச்சு
செய்குறியில் தவறிவிட்டால் பாவமாச்சு
ஆரப்பா அறிவார்கள் கவியின்பேரும்
ஐந்தெழுத்தில் மூன்றெழுத்தைச் சேர்த்துப்பாரு
காரப்பா சூலமதை மூலமென்றும்
கைப்பிடியே வேதமென்றும் பாருபாரே. (50)

வேதமதைப் படைத்தவனே உடுக்கையாகும்
விதமான தமர்க்கயரை விளம்பக்கேளு
பாதமதைச் சுமந்தவர்க ளெட்டுப்பேரும்
பருத்ததுணை யானார்க ளப்பாபாரு
பேதமதை விசமெட்டும் கயரதாச்சு
பேச்சரிய வாணியடா நாவதாச்சு
மாதம்மதைப் பூட்டுகின்ற வளையஞ்சக்கரம்
மகத்தான யிடவாரே லிங்கபீடங்காணே. (51)

காணவே யின்னமொன்று சொல்லக்கேளு
காசினியிற் கருமவினை போக்கவேணும்
பூணவே வேதாந்தம் பூணவேணும்
புகழ்பெரியோர் தன்பதத்தைப் புகழவேணும்
காணமில்லாப் பாவிகள்தன் னுறவுவேண்டாம்
நாற்றிசையும் புகழுவே பூஜைவேணும்
தோணவே குருபதத்தைப் பூஜைசெய்து
தொல்புவியில் வினைகள்தனை வெல்லலாமே. (52)

அரன்கையில் பிடித்ததொரு உடுக்கைத்தானும்
அம்மனிடம் வந்ததொரு வகையைச்சொல்லும்
பிரமனுட சித்தொன்று சொன்னேனப்பா
பித்தன்கை தனில்வந்த வகையைச்சொல்லும்
காமதிலே யிடித்ததொரு சூலந்தானுங்
காலகண்டன் கையில்வந்த விபரஞ்சொல்லும்
மரமான மரப்பாவை விபரஞ்சொல்லும்
மணிச்சிலம்பும் சிலங்கையின்பேர் சொல்லுவீரே. (53)

சொன்னமொழி தவறாத சுந்தரமேகேளு
சோதித்துப் பார்த்தாக்கா லெல்லாந்தோணும்
கன்னமிடுங் கள்ளருடன் சேரவேண்டாம்
கசமால மட்டியுட னெதிர்க்கவேண்டாம்

அன்னமிடு வார்தனக்கு விண்ணம்பண்ணும்
அறிவுகெட்ட மூடருக்குச் சொல்லவேண்டாம்
இன்னமடா மெத்தவுண்டு சொல்லவென்றால்
இறையவனு மீஸ்பரியு மொன்றுதானே. (54)

தானென்ற குருபதத்தைக் காக்கவேணும்
தான்பூஜை செய்துமனந் தேறவேணும்
தேனென்ற பரவெளியிற் சேரவேணும்
தெளிவான தெய்வத்தைக் காணவேணும்
ஆனென்ற அட்சரத்தை யறியவேணும்
அம்பலவர் பதந்தன்னைக் காணவேணும்
மானென்ற மாய்கைதனை ஒழிக்கவேணும்
மாசில்லாக் குருபதத்தை மகிழ்ந்துகூறே. (55)

கூறவே யின்னமொன்று சொல்லக்கேளு
குறமகளைக் கைப்பிடித்தோ னெனக்குச்சொன்னர்
மாறவே மணிச்சிலம்பின் பெயரைக்கேளு
மாயனுட மாயமடா மகிழ்ந்துகாணு
தேறவே வைத்ததொரு மரப்பாவைதானும்
தெளிவாகச் சொல்லுகிறேன் சுந்தரமேஅய்யா
ஆறவே காணுதற்கு உருவேயாச்சு
ஐவருமே குடியிருந்த பாவைகாணே. (56)

காணவே ஐவருமே யிருந்தவீட்டில்
கமலமலர் சாத்துவது மெனக்குச்சொல்லும்
தோணவே தூபமொடு தீபங்காட்டித்
தொழுதிறைஞ்சும் வகையதனைச் சொல்லவேணும்
போனபேர் திரும்பிவந்த விபரஞ்சொல்லும்
பொன்மலர்களைந்தான விபரஞ்சொல்லும்
காணவே யெந்தனுக்குக் காட்டவேணும்
கருத்தறிய யெந்தனுக்குக் கருதுவீரே. (57)

வீராதி வீரனென்றுற் சொல்லக்கேளு
விதவிதமா யுலகத்தில் நடக்கையுண்டு
பாராத மூடரிடம் பேசவேண்டாம்
பதியிருந்து குருவினுட பாதங்காணு
சோராதே ஒருவருக்குஞ் செப்பொண்ணாது
செய்தவத்தாற் கிட்டுமடா யிந்தநூலு
காராத சீஷனுக்குக் காட்டினுக்கால்
கழுதையெனப் பேர்படைத்துத் திரிவாய்தானே. (58)

திரியவே பூசினுட பெயரைக்கேளு
திரிந்திடும் வசியமடா தெரிவையாச்சு
அறியவே தீபமடா அம்மையாச்சு
அறிந்துநின்ற தூபமடா அரியுமாச்சு
பிரியமுட னெழுந்ததுவே பஞ்சபூதம்
பிரபலமாய் நவக்கிரகச் சித்துமாச்சு
தெரியவே ஐந்துமலர் பெயரைக்கேளு
தெளிவான சதாசிவத்தின் செயலதாச்சே. (59)

ஆச்சென்று யெந்தனுக்குச் சொல்லவந்த
ஆதியென்ற சற்குருவே அய்யாஅய்யா
பேச்சென்ற மணிபிறந்த மார்க்கஞ்சொல்லும்
பேருலகி லெட்டுதிக்குப் பேர்தான்சொல்லும்
காச்சென்று பந்தலிட்ட கைகளாரு
கன்னிமணஞ் செய்தவகை கருதவேணும்
தாச்சென்ற தரணிதனில் தாழ்த்திச்சொல்லும்
சதாசிவனுய் நின்றபேர் சொல்லுவீரே. (60)

சொல்வதற்கு யின்னமொன்று சொல்லக்கேளு
சொற்பெரிய சதாசிவனு மீசனுமேகூடி
வெல்லுதற்கு வேதனையும் கூடச்சேர்த்து
வேதமென்ற மணியாச்சு விளங்கக்கேளு
அல்லுதற்கு ஆதியடா ஆட்டம்மாலால்
அகாரமூத லஞ்சோடு மூன்றுமாச்சு
கல்லுதற்குக் கால்நிறுத்தும் விபரங்கேளு
காசினியில் முன்சொன்ன கருத்துமாச்சே. (61)

ஆச்சென்று யெந்தனுக்குச் சொல்லிவந்த
அய்யர்தனை யடிதொழுது வணங்கிப்பின்னும்
பேச்சென்ற மூலமது யெனக்குச்சொல்லும்
பேருலகில் மாலைகட்டு மார்க்கமென்ன
காச்சென்று கோலமிட்ட விபரஞ்சொல்லும்
காசினியில் நாடுசுற்றும் விபரஞ்சொல்லும்
வாச்சென்ற விசனமெல்லா மெனக்குச்சொல்லும்
வரிசையுட னிதையறிந்து சொல்லுவீரே. (62)

சொல்லென்று கேட்கவந்த சுந்தரமேஅய்யா
சொற்பெரிய மூலத்தைச் சொல்லக்கேளு
கல்லென்று பேசுமடா மூலவாசி
கலந்துநின்ற மூலத்தைக் கண்டுபாரு

சில்லென்ற மாலையடா சிவமைந்தா
சிறப்பாக மாலையிட்ட மார்க்கங்கேளு
அல்லென்ற வீணைதிரி யிட்டசத்தம்
அறிந்துகொள்ளு உன்னுள்ளே அறிவினாலே. (63)

அறிவுள்ளோ ரிதையறிந்து பேசவேணும்
ஆதியிலே பதினெட்டு மெனக்குச்சொல்லும்
புரிவுகொண்ட கேடையமுங் கத்திபாரு
பல்சமய மாணவகை பகரவேணும்
தெரிவதற்கு யின்னமொன்று செப்பவேணும்
செப்படியின் வித்தைகளே செப்பவேணும்
யெரிவதற்குக் கல்லெறிந்த மார்க்கம்போலே
யெழுத்தறிய வேணுமையா யேகநாதா. (64)

யேகமாய் நின்றபரர் தன்னைப்போற்றி
யேகவெளி யானநிலை யமைந்துங்கேளு
பாகமாய் நிலையைந்தும் படியைந்தும்
பாணுறு மொன்றைந்தும் பகரக்கேளு
மோகமாம் பூவைந்து மோகினியேயாச்சு
முருகனு ருபதேச மதையேகேளு
தாகமாய்க் கேட்கவந்த பிள்ளாய்நீயும்
தருதலையோ டிணங்காதே தாயைப்போற்றே. (65)

போற்றுதற்கு யென்குருவே சாமிநாதா
பொருந்திநின்ற ஜாதிபதி னெட்டுஞ்சொல்லும்
யேற்றுதற்கு நிலமைந்து மெனக்குச்சொல்லும்
யேகவெளி யானதொரு விபரஞ்சொல்லும்
வாழ்த்துதற்கு யென்குருவை வாழ்த்தவேணும்
வழிபாடு யேதெனக்குச் சாற்றவேணும்
பூற்றுதற்கு வேறுகத் தோணும்வண்ணம்
பகருமையா யென்குருவே ஞானநாதா. (66)

பாடுகிறேன் பதினெட்டு ஜாதிமார்க்கம்
பரமனுர் சொன்னபடி பகரக்கேளு
ஆடுகிற கெங்கையடா ஆத்தாள்தானும்
அறிவுள்ள பேனைந்து தன்னைப்பெற்றாள்
தேடுகிற சம்மந்த ஜாவேயாச்சு
தெளிவான புத்திரமே சம்மந்திராச்சு
நாடுகிற பிர்மமடா பிராமணருமாச்சு
நன்மைசெய்யுஞ் க்ஷத்திரியர் முனிவராமே. (67)

மூனியான வசியருக்குள் நாலுஜாதி
மூதல்சொன்ன பிராமணர்க்குள் நாலுஜாதி
கனியான ராஜருக்குள் நாலுஜாதி
கலந்துதடா குருகுலத்தார் கண்டுபாரு
மணியான நால்ஜாதி வர்க்கந்தன்னில்
மதிப்பான சூத்திரனென் றறிந்துமின்னும்
தனியான சூத்திரனில் நாலுஜாதி
தனித்தனியே யிதுநாலும் பாருபாரே. (68)

பாரப்பா பார்தனிலே வசிஷ்டர்தானும்
பாராண்டார் குருவானார் பண்பாய்க்கேளு
வேரப்பா வேதனடா பிராமணர்க்கு
வேதசவே வியாசனார் விளம்பக்கேளு
சாரப்பா வைசியனுக்குச் சொல்லக்கேளு
சதாசிவனா ரெந்தனுக்குச் சொன்னமார்க்கம்
காரப்பா கண்ணனுட கலையேயாச்சு
கலந்துநின்ற நால்ஜாதி யிவ்வாறுச்சு. (69)

ஆச்சென்று யெந்தனுக்குச் சொல்லவந்த
அய்யரே யின்னமொன்று அறையவேணும்
பேச்சொன்றும் பேசாமற் பேசவேணும்
பேதமாம் நிலமைந்தும் சொல்லவேணும்
காச்சென்று கதிர்விளைந்த கனியைச்சொல்லும்
கதிர்தரித்த மன்னருட யெயரைச்சொல்லும்
வாச்சென்று தேவர்கள்தான் வந்தாரென்ற
வரம்பதனைத் தப்பாமல் நடந்தவாரே. (70)

வாரான நிலமைந்தும் பூத்தபூவும்
வன்னியென்ற நிலமதிலே அரசர்பேரும்
தாரான அண்டமதிற் பூத்தபூவும்
தருமதே வதையுரைத்த மரத்தின்பேரும்
கூரான சுடுகாடு ஷுந்தவரும்
கூடிநின்ற தேவதைக ளானவாரும்
யாரான பார்வதியாள் பார்த்தவீடு
யாருலகில் வந்ததென்ன வகைசொல்வீரே. (71)

வகையென்ன சுந்தரமே மகனேஅய்யா
வாய்த்தமல ரைந்தையுமே சொல்லக்கேளு
தகையென்ன கோடியிலே பூவதொன்று
தரியநீ ராலொன்று நெருப்பூவொன்று

பகையில்லா யிலைப்பூவும் நீர்ப்பூவுங்கூட்டிப்
பஞ்சவர்ண மென்றபூ வைந்துமாச்சு
நகைபுரிந்த சோதியடா யெனக்குச்சொன்னார்
நல்லோர்கள் தான்காண்பார் கருமிகாணார். (72)

காணாத பொருள்களெல்லா மிதற்குள்ளாச்சு
கலந்துநின்ற பேரின்ப மிதற்குள்ளாச்சு
தோணாதோ ரொருவரிடஞ் சொல்லவேண்டாம்
தொழுதிறைஞ்சிப் பணிந்தாலும் பொருளீய்ந்தாலும்
வாணாளுக் கேற்றவன்போ லிருப்பானப்பா
வழிவசத்தா லவன்குணத்தை கண்டுநீயும்
நாணும லவன்குணமும் நடத்தைபார்த்து
நற்குறியு மிகப்பார்த்து நவிலுவாயே. (73)

பார்த்துமே பரகெதியைக் காட்டுதற்குப்
பகல்கலையை யாராய்ந்து குருவேசாமி
கார்த்துமே யேழான வகையைச்சொல்லும்
காசினியில் வேடமிட்ட கருத்துஞ்சொல்வீர்
வேத்துருவாய் மரம்நீண்ட வகையைச்சொல்லும்
வேலென்ற மார்க்கமது யெனக்குச்சொல்லும்
மாத்துருவாய் நின்றதொரு மதனைக்காட்டும்
மங்கைரதி யானதொரு விபரங்காட்டே. (74)

காட்டுமென்று யென்தனையுங் கேட்கவந்த
கருத்துள்ள யென்மகனே கருத்தைக்கேளு
மாட்டுமே லேறிவரு மீசனாரும்
மன்மதனுக் கேதெண்டல் தானுமானார்
பாட்டிலே உள்ளபடி சத்தமேகம்
பாரளந்த மாயவனார் பதியுமானார்
யேட்டிலே எழுதியதோர் வசந்தனப்பா
யேழிலே ஒருவனடா யியம்புவேனே. (75)

யியம்புகிறேன் மாயவனு மேழிலொன்று
யெளிதான வசந்தனடா யீஷனாகும்
பாம்புமேல் பள்ளிகொண்டோரின் தனக்குப்பேரு
பக்தராம் பதியிலுள்ளோர் தனக்குச்சொல்லும்
காம்பனைய தோளாலு மெனக்குச்சொல்லும்
கயிலையென்ற மேருவடா மதன்கிரியுமாச்சு
வீம்புகளைப் பேசாதே சொல்லக்கேளு
விதமான மாய்கையடா வேடந்தானே. (76)

வேடனென்ற சிவன்தானு மெனக்குச்சொன்னார்
வேதனும் பிரமன்வே தியனுமானான்
ஆடனென நின்றவனே அரசனானான்
அன்பான ருத்திரனே சூத்திரனென்பார்
காடனென ஆதவனே வசியனப்பா
கனம்பெற்ற பரமதுவு மெங்குமேநிறைந்து
கோடனென தாபாமுஞ் சங்கமங்கள்
கொடிதான ஜீவஜெந்து உதித்தவாரே. (77)

வாரான ஜனங்களுக்கு மைந்துபூதம்
மருவியதோர் தேவதைக்கு மைந்துபூதம்
மருவியதோர் அண்டமெல்லா மைந்துபூதம்
சதாசிவமாய் நின்றதுவு மைந்துபூதம்
பேரான ஒளியெல்லா மைந்துபூதம்
பேசரிய மந்திரமு மைந்துபூதம்
கூரான வெளியெல்லா மைந்துபூதம்
குரும்பரே ஐந்ததினு லெல்லாமாச்சே. (78)

ஆச்சென்ற மூலமடா சுத்தரமேஅய்யா
அம்பலத்தி லாடுகின்ற அய்யர்தானும்
பேச்சென்ற பிரமனுட ஜாதிதன்னில்
பேராக நால்ஜாதி வகுத்தாரய்பா
மூச்சென்ற வைசியனில் நாலுஜாதி
மூன்பாகச் செய்தார்காண் முதல்வன்தானும்
காச்சென்ற கனிவுக்குள் கலந்தயீசன்
கலைநான்காய் நின்றவனே கருணைநாதன். (79)

நாதனென்று யெந்தனுக்குச் சொல்லவந்த
நாயகமே யென்குருவே சொல்லக்கேளீர்
வேதமதைப் படைத்தானும் விஷ்ணுருத்ரன்
மேலான மயேஸ்பரனுஞ் சதாசிவனுங்கூட
பாதமதா லுலகளந்த வாருஞ்சொல்லும்
பண்பான உமைதேவி விபரஞ்சொல்லும்
மாதம்வரு ஷம்படைத்த விபரம்சொல்வீர்
மாநிலத்தில் திவசமென்ற பேர்சொல்வீரே. (80)

பேர்சொல்திதி மூவஞ்சு மெனக்குச்சொல்லும்
பெலமான நாளதுவு மெனக்குச்சொல்லும்
பார்தனிலே பதங்கள்திங்கள் சாய்கைசொல்லும்
பாசமைப் மாறுக்கும் விபரஞ்சொல்லும்

மார்தனிலே பூண்டரவு பெயரைச்சொல்லும்
மகாதேவர் தரித்தமணி பெயரைச்சொல்லும்
கார்மேக மேனியனு ருலகந்தன்னில்
கருதுமவ தாரம்பத் ததுஞ்சொல்வீரே. (81)

கூத்தான தொன்றுமடா மெத்தமெத்த
கூறுதற்கு நாவசையாச் சூட்சமப்பா
பார்த்தாலே சொற்பமடா பகர்ந்துபாரு
பாருலகைப் படைத்தசதா சிவத்தின்கூறு
யேத்தவடி மனம்போனாற் புத்திபோச்சு
யெளிதென்று யெண்ணாம லிருந்தீயும்
காத்தல்லோ குருபதத்தைக் கருணையாக
கருத்தல்லோ வெளியாகக் காணுங்காணே. (82)

காணவே சதுர்யுகத்தைப் படைத்தாரீசன்
களங்கமற்ற தேவரிஷி சித்தரோடு
தோணவே தொல்புவியை யுண்டுபண்ணி
தொழுவதற்குத் தெய்வமா யிருந்தாரீசன்
தானேவ யல்லாது வேறுமுண்டோ
தற்கமிட்ட சுந்தரமே கேளுகேளு
நாணவே அல்லியது பூத்தாப்போலே
நல்லகெதி யடைத்தவர்கள் வானமீனே. (83)

மீனான நட்சேத்திர மிருபத்தேழு
மேதினியில் வந்ததொரு வகையைக்கேளு
தேனான பூஜையிலே தெளிந்தபேரும்
தேகத்தைச் சித்திசெய்து நெரிசித்தோரும்
மானான பெண்மாய்கை கடந்தபேரும்
மாசில்லான் தன்பதத்தைக் கண்டபேரும்
ஊனான தேகசித்தி செய்துமின்னும்
உலகத்தில் திதிவார மானார்பாரே. (84)

வாரமென்ற நாளேழுஞ் சொல்லக்கேளு
வளமான யிரவுபகல் ரெண்டுமப்பா
பாரமென்ற ராசிதற்குக் குருவாய்நின்று
பரலோக தேவருக்கு ஒருவனய்யா
சாரமென்ற கடலேழிற் றுவண்டமாயன்
சக்கரத்தா லாடுகின்ற கூத்திதப்பா
தூரமென்ற திதிவாரம் புதுமையாச்சு
புத்தியுடன் தெரிசனத்தில் அவண்டுபாரே. (85)

ஆவண்டோ பாரென்றுசொன்ன குருவேஅய்யா
தொல்புவியிற் றொழிலாளி பெயரைச்சொல்லும்
கல்லெரிந்த கல்லினுட பெயரைச்சொல்லும்
காராளன் றன்மனையில் கன்னிவந்ததோதும்
ஆவண்டுபோன அரவைத் தரித்ததேது
ஆயிரத்தெட் டிதழாக விரிந்ததேது
காவுகண்டு கலையுண்டு கர்த்தாவென்று
காசினியிற் கன்னியென்று கலந்துசொல்லே. (86)

கலந்திருந்த பிரணவமே சொல்லக்கேளு
கல்லெறிந்த வகையல்லோ கர்த்தன்கூறு
அலைந்துவந்து சேருகிற இடந்தானப்பா
ஆயிரத்தெட் டிதழல்லோ பராபரமுமாச்சு
புலன்தேடும் பெரியோரைப் பணிந்துபோற்றிப்
பராபரமாய் நின்றதொரு பரனைப்போற்றி
தலந்தனிலே உள்ளதொரு கஞ்சம்போலத்
தானல்லோ அடிமூல மானுள்பாரே. (87)

அடிமூல மானதொரு குறட்டின்பேரும்
அடிமிதிக்கு மேற்பலகைக் குமிளின்பேரும்
பிடியான இருவிரலி னிடுக்குப்பேரும்
பேரான வெள்ளியிரு குமிழின்பேரும்
படியான காவுக்கும் பாதமங்கே தூக்கிப்
பதமாக நின்றதுக்கும் பெயர்தானேது
தடியான மாத்திரைக்கோல் பெயரைச்சொன்னால்
தஞ்சமென்று உன்பாதம் வணங்குவேனே. (88)

அடிமூல மானதொரு குறடுதானும்
அப்பனே சொல்லுகிறேன் ரிஷபமாச்சு
மூடியான பலகையப்பா அண்டமாச்சு
மூவுலக மரிகுமுளி லிங்கமாச்சு
பிடியான இடவயர்தான் சத்தியாச்சு
பிடித்திருக்கும் விரல்ரெண்டும் குயேச்சுச்சு
தடியான பொன்னோடு வெள்ளிரெண்டும்
சந்திரனுஞ் சூரியனுந் தான்வணங்கே. (89)

வணங்குதற்கு யின்னமொன்று சொல்லக்கேளு
வங்கயான ஒட்டியாணம் யோகவேட்டி
இணைந்தருகும் ருத்திராட்சம் தமர்கபர்க்கும்
கூறியதோர் திரிச்சடைக்கும் பூணூலேரும்

மணந்தருகு முயிரெழுத்து நாவின்பேரும்
மனமான உடல்நரம் பதுவின்பேரும்
பெணங்கிடவே உக்திக்கம லத்தின்பேரும்
பேராக யிருக்கும்வகை சொல்லுவீரே. (90)

யெடுத்துவைத்த அடியதுதா னப்புவாச்சு
யீஊஒஆ வென்ற எழுத்துங்கண்டால்
தடுக்கவே முடியாத மாத்திரைக்கோல்
தற்கமிட்ட சுந்தரமே விஷ்ணுவாச்சு
அடுத்துநின்ற ஒட்டியாணம் யோகவேட்டி
அப்பனே ருத்திரனுட அம்சமாச்சு
படுத்திடுவா யுடல்நரம்பு வயருதானும்
பார்த்தறிந்து சொல்லுகிறேன் பகுந்துமேலே. (91)

மேலான கோலினுட் யாளிக்கும்பேர்
மெய்விளங்குங் குருவினுடன் சீஷன்பேரும்
காலான தாம்பூரக் கமண்டலத்தின்பேரும்
கருதிநின்று மனமுரைத்த சிரசின்பேரும்
மாலான மகாவிஷ்ணு மனிதர்க்கும்பேர்
வகையான தத்துவந்தொண் ணூற்றாறின்பேர்
காலாகப் பகுத்தறிந்து சொல்லவேண்டும்
நமஸ்கரித்து அடிபணிந்து நின்றேன்பாரே. (92)

பார்த்தறிந்து சொல்லுகிறே னின்னங்கேளு
பாங்கான ருத்திராட்சம் வடிவுகண்டம்
யேத்தறிந்த தமரதுவே வேதமாச்சு
யியலான கபாரதுவா கமமேயாச்சு
மாத்தறிந்த திருநீறு சடைபூணூலு
மயேசுரனும் ருத்திரனும் பிர்மாவாச்சு
சேத்தறிந்த உந்தியெனுங் கமலம்நாவு
செயமான பிருதிவியின் மயமாம்பாரே. (93)

பாருநீ சொல்லுகிறேன் கேளும்ப்பா
பாதமென்றுஞ் சிரசென்றும் ரெண்டுக்கும்பேர்
கூறுநீ உடலுக்கு முயிருக்கும்பேர்
கூட்டிலே வாழுகின்ற குருவின்பேரும்
வாருமிரு மென்றுரைத்த வசனப்பேரும்
வாசியென்ற யெழுத்தினுட வசனப்பேரும்
பார்புகழ யிதையறிந்து சொல்லவேணும்
பராபரமே யென்குருவே சாமிநாதா. (94)

பாரப்பா யிவர்கள் நிற்கும் நிலையதுவேயறிவு
பாதமடா அண்டமடா சிரசேயாகும்
கூரப்பா ஆசுஊ உருவுடன் கருவும்
கூட்டிலே வாழுகின்ற சிவனுமாச்சு
சிரசப்பா வுள்வாழ்வே பிரமமாச்சு
சீரான குருவார்த்தை கயிலாசமாச்சு
ஆரப்பா வாசியென்ற குதிரையாச்சு
அப்பனே அதுதனைத்தா னறிந்துபாரே. (95)

சாரான அண்டமதில் நிறைந்தயீசன்
சகலகலை வல்லவனு யிருந்தமூர்த்தி
பேரான ஐம்பூத மானமூர்த்தி
பேருலக மேலுலகம் படைத்தனுதன்
கூடான சுடுகாடு குடியிருந்தமூர்த்தி
கூறுகிற வாசனத்தி லிருந்தமூர்த்தி
ஆரான ஆறுமுக மானமூர்த்தி
அம்பலத்தி லாடுகிற ஐயர்தானே. (96)

தானென்ற ஆணுவத்தைப் போக்காய்நீயும்
தரணிதனில் விருதுபல பெயரைக்கேளு
போமென்ற புலிதண்டைப் பெயரைக்கேளு
பொல்லாத கசடர்மனங் கலங்கவேதான்
நாமென்றே ஆடுகிற நகாரமாச்சு
நல்வினையுந் தீவினையுங் கண்டதப்பா
பாமென்ற பரசமைய மாறுங்கேளு
பதினெட்டு நல்விருதும் பிறந்தவாரே. (97)

பிறந்தவகை யேதென்றால் பிறப்புக்கேளு
பேசரிய அகாரமடா கவிக்கியாச்சு
சேர்ந்தவகை யேதென்றால் மகாரம்ஒண்டித்
தேசத்தி லகாரமிட்டால் தளுக்குமாச்சு
பரந்தமயி லிறகுவடா சிகாரமாச்சு
பரதேசி சடையல்லோ உகாரமாச்சு
இறவாம லிதையறிந்து யெழுத்தைச்சேர்த்து
யெட்டெழுத்தும் பத்தெழுத்துங் கண்டுபாரே. (98)

கண்டுசொல்வா ரண்டமதி லோகத்துள்ளே
காட்டுவா ரப்படியாய்க் கொற்றபேரை
தெண்டடனே கமண்டலஞ் சங்கத்தாணி
தெளிவான கப்பரையேந் துங்கைக்கும்பேர்

கண்டருடன் சொல்லாதே புலியின்பேரும்
வாலையுட பக்கம்நின்ற வடிவின்பேரும்
கண்டறிந்து சொன்னக்கால் விடுவேன்யானும்
கமலம்போற் சீர்பாதங் காணவேணும். (99)

காணப்பா யின்னமொன்று சொல்லக்கேளு
கருதவிலாக் கடவுளென்ற சோதிதானும்
ஆணப்பா தெண்டென்று அறிந்துகொள்ளு
அன்பாகக் கமண்டலமே ருகுவாச்சே
தோணப்பா சங்குத்தொனி அங்கங்கேது
தோற்றவகை கப்பரையுந் தியானமாச்சு
ஊணப்பா யேந்துகைக்கப் பரையைக்கேளு
உற்றதொரு சிரசைந்தும் சர்ப்பந்தானே. (100)

சர்ப்பமென்ற ஆபரண மணிந்தாரீசன்
சாஸ்பதமாய் அஞ்சுபஞ்ச பூதமாச்சு
பொற்பரமாய் நின்றதொரு ஐந்துருத்தான்
போக்காகப் புலியென்ற பேருமாச்சு
கற்பகம்போல் உந்தனக்குச் சொன்னேனப்பா
கணிந்துபார் வாலையென்ற பேருமாச்சு
அற்பமென்று மனதுளன்று தவிக்குங்காலம்
அணுகாது யென்றுசொன்னே னய்யாகேளே. (101)

அய்யாகேள் வாலையுட பாகம்நின்ற
அய்யனும் அரனென்ற பேருமாச்சு
மேய்யாகச் சொன்னதெல்லாம் மனதிற்கொண்டு
மெய்மையைக் கண்டுகொண்டால் தவமுமாச்சு
மெய்யாய்நீ யானதினால் உனக்காய்ச்சொன்னேன்
மேவியிந்தச் சூட்சமதை விரும்பிப்பாரு
அய்யாகேள் புலத்தியனே அறிந்துகொண்டு
அறிவாக நீ நினைந்து தெரிந்துகொள்ளே. (102)

அறிந்துகொள் ளென்றுசொன்ன குருவேஅய்யா
அடியேற்குத் தெளிவாகச் சொல்லவேணும்
பிரிந்துநின்ற பாவமென்ன புண்யமென்ன
பேரான பெருமையென்ன பிதற்றலென்ன
தெரிந்துநின்று செய்வதென்ன செய்யாதென்ன
தேசத்தில் பலபலவாய்ச் சொல்வதென்ன
சொரிந்துநின்ற வாக்கியத்தை யய்யாநீயும்
தெரிவிப்பீர் யெனக்கருள்வீர் போற்றினேனே. (103)

போற்றிநின்ற யென்னுடைய மாணுகேளு
புகலுகிறே னுந்தனுக்கு விபரமாக
யேற்றிநின்ற பேர்கள்தா னறிந்தோரப்பா
யிதைவிட்டுப் பலபலவாய் நினைவுகொண்டு
மாற்றிநின்ற மாண்பரெல்லாம் பிதற்றியேதான்
மனமலைந்து திரிந்திடுவார் மானிலத்தில்
போற்றி நின்ற புண்ணியத்தால் தவத்தோனுகி
புவிதனிலே வாழ்ந்திருப்பார் ஜெகஜாலத்தே. (104)

ஜாலமென்ன உண்மைகண்டா லதுவேயாசான்
சண்டாளர் காணும லலைவதாச்சு
கோலமென்ன ஆண்டியுட வேடமாச்சு
கூடுவிட்டுப் பாய்கிறதே ஜாலமாச்சு
பாவமென்ன பகடைகளே விஷ்ணுவாச்சு
பதிவான வண்ணனப் படியேயாச்சு
கோலமென்ன கோலமடா சொல்லக்கேளு
கோபால வமிசத்திற் பிறந்தார்வேதா. (105)

வேதாந்த வேதியனே குருவேசாமி
வேணமுழு தாளியற்கு வேணுயர்ந்தவாறும்
நாதாந்தஞ் சித்தாந்தம் ரெண்டுஞ்சொல்லும்
நன்மைகண்ட நாதாக்கள் நடத்தையென்ன
வேதாந்த மென்பதற்கு ரூபமென்ன
வேதாவும் நெடுமாலும் பிறந்ததெங்கே
நாதாந்தத் துள்ளிருந்த நாதாசாமி
நன்மைதரு மென்குருவே நடத்துவீரே. (106)

கூறுவே னென்மகனே புலத்தியாகேள்
குருவான வேள்சன னிந்திரனப்பா
மாறுகிறேன் மண்டலத்திற் தவத்தைச்செய்தோன்
மனிதர்க்குந் தேவர்க்கும் தேவனுர்க்கும்
கூறுகிறேன் வேதாந்த மிகுதியப்பா
குவலயத்திற் சித்தாந்தஞ் சொல்லக்கேளு
மாறுகிற கலையல்லோ சித்தாந்தமாச்சு
மானிலத்தி லயன்மாலும் பிர்மாவாச்சே. (107)

பிரமமென்ற [illegible]க்குத் தொழிலைச்சொல்லும்
பிரபல[illegible]த் தொழிலைச்சொல்லும்
கருமமென்ற [illegible]தொழிலைச்சொல்லும்
கருவ[illegible]னுக்குச் சொல்லவேணும்

தருமமென்ற சாதிபல பெயரைச்சொல்லும்
தனித்தமனு வாருதனை வகுத்துச்சொல்லும்
மருமமென்ற மயக்கத்தை யெனக்குக்காட்டும்
மார்க்கமென்ற வழிபாடு வகுத்துமூலம். (108)

மூலத்தி லறிவுதனைக் காட்டவேணும்
மொழிதனிலெட் டாகநின்ற பேரைச்சொல்லும்
தொகுத்திடவே தொல்புவியில் தொங்கிப்போடு
துயரடைந்த மனுக்களுட தொழிலைச்சொல்லும்
விதித்திட்ட விதிவசத்தை யெனக்குச்சொல்லும்
விமலனென்ற வேளாளன் தனக்குமூலம்
கதித்திடவே யெந்தனுக்குச் சொல்லவேணும்
கலைநான்கா யோடுகின்ற கடவுள்தானே. (109)

தானென்ற கருமறைப்பாய்ச் சொல்லவேண்டாம்
தாதருட வம்சத்தின் தொழிலும்பேரும்
ஊனென்ற ஊர்மகனர் மார்க்கஞ்சொல்லும்
உத்தவர்க ளுறவான விபரஞ்சொல்லும்
வீனென்ற மன்னுடையான் திருக்கைப்பேரும்
மங்கலவன் கத்தியொடு கிண்ணப்பேரும்
தேனென்ற சிரசுக்கு முனைக்குஞ்சொல்லும்
தெளிவான யென்குருவே சாமிநாதா. (110)

நாதனென்ற நாதனுட நாமமாச்சு
நல்லகெதி யானவளே நடுவுமாச்சு
போதனென்ற போதமடா தியானமாச்சு
போக்கரியா ருலகத்தில் பொய்கள்பேசி
வாதமென்ற வாதமதிற் சிக்கிமாய
வைத்தார்காண் மானிலத்தில் வரிசையாக
பேதகமாய் முழக்கமிட்ட பொருள்தானப்பா
பேருலகிற் சிவனுமையாள் தானுமாச்சே. (111)

ஆச்சடா அருவுருவோர் தொழிலைக்கேளு
அனுதினமு மறவாமற் பூஜைசெய்வோன்
பேச்சடா பேசுவார்கள் பெருமையாளர்
பெருமையென்ற வாலையைப்பூ சித்தபேர்கள்
வாச்சுதடா யலஜாதி பொருளைக்கேளு
வையகமாம் பூமியது தெய்வமாச்சு
காச்சுதடா முகிலேழும் யேழுஜாதி
கலந்துநின்ற ஒருஜாதி விண்ணுக்கானே. (112)

ஜாதியென்ற சதுர்குலத்திற் பிறந்தமார்க்கம்
சதுர்மறையோன் றன்னுக்குள் நாலுமாச்சு
ஓதிவைத்த பஞ்சகர்த்தா ளைந்துபேரும்
உறவானு ராகையினுற் பதினெட்டாச்சு
பாதிமதி தனையணிந்தா ரெனக்குச்சொன்னுர்
பாரபரையா ளப்படியே சொன்னுளாத்தாள்
ஆதியிலே வேளாளன் பிறந்தானப்பா
அவனிடத்திற் சிவசத்தி பிறந்தாள்பாரே. (113)

ஆத்தாளைக் கண்டாலே யெல்லாங்காணும்
ஆதிவஸ்து அனுதிவஸ்து அவளேயாச்சு
பார்த்தாலே பரிகாரீ கிண்ணிசத்தி
பரிந்தசத்தி பிரமமடா பரிந்துகேளு
தோற்றுதற்கு யெதிரிருந்தோன் தெய்வமாச்சு
தொழிலாளி கைவிரலோ சொல்லக்கேளு
பார்த்தவற்கு அஞ்சுதலை நாகமாச்சு
பரிவாக அவர்களுட தெய்வந்தானே. (114)

தெய்வமென்ற பாவைபண்ணுங் குசவனுக்குத்
தெரிவையடா ஆதிமூலந் தெளிந்துபாரு
பைரவந் தனையணிந்த பரமனுரும்
பாருலகைப் படைக்கவல்லோ திருக்கையானுர்
கைதனிலே பிடித்தகம்பு விஷ்ணுவானுர்
கதித்தநவக் கிரகம்நவ பாண்டமாச்சு
மேதினியி லவன்குலமே பிரமமாச்சு
விண்ணுேர்போற் றுங்கடவுள் பரமுமாச்சே. (115)

தர்மமென்ற திராசுமுனை சுளினையாச்சு
பெலமான குருக்களவன் பேரைக்கேளு
தர்மமென்ற தர்மமடா சிவமதாச்சு
தலைத்தோங்கு மிடமதுவு மதுவேயாச்சு
கர்மமென்ற கர்மவினை தன்னைப்போக்கக்
கயாராக நாகமதை யெட்டும்சேர்த்து
தர்மமென்ற திராசினுட பலகைகேளு
தாணிதனில் விண்மண்ரெண் டாச்சுபாரே. (116)

பாரப்பா குருபதத்தை யின்னங்காரு
பாரபரையா ளெந்தனக்குப் பகர்ந்தவார்த்தை
ஆரப்பா எனைப்போலே சொல்லப்போறுர்
ஆமிர்த நூல்மூன்னுற் மூவெட்டுக்குள்

காரப்பா குருபதத்தைப் பனிரெண்டாண்டு
கருணையுடன் கைகொடுத்தாற் கண்டுதேரு
சேரப்பா சிவதவத்திற் சேருசேரு
ஜெகஜால வித்தையெல்லா மிதற்குள்ளாச்சே. (117)

ஆச்சென்ற பலகையது ஆதாரமாச்சு
அப்பனே யென்மகனே புலத்தியாகேள்
காச்சென்ற கனிவறிந்து கண்ணைமூடிக்
கயிலாச பதிகண்டா லெல்லாங்காணும்
பேச்சென்ற உபதேச மறியவேணும்
பேதையுட மாயைதனை யகற்றவேணும்
மூச்சென்ற மூச்சறிந்து தாயைப்போற்றி
முழுதுமே கண்டறிந்தால் சித்தனாமே. (118)

சித்தான சித்ததுவை யெனக்குக்காட்டும்
ஜெகத்திலே ராகம்பதி னெட்டுங்காட்டும்
முத்தான குளவியம்மி முதலுங்காட்டும்
மூர்த்தியாய் நின்றதொரு நிலையுங்காட்டும்
வித்தான ரூபமது யெனக்குக்காட்டும்,
விதவிதமாம் லோகமது பேரைச்சொல்லும்
ர்த்தாவே யென்குருவே சாமிநாதா
காவில்வீழ்ந் தேன்கருணை புரிவீர்தானே. (119)

தானென்ற புலத்தியனே சொல்லக்கேளு
தாரணியல் விண்ணுமண்ணுஞ் சித்துமாகும்
மோனரா கத்தெழுத்து பத்துமெட்டும்
மோதகமாங் குளவியது மொழிந்தேனீஷன்
பானென்ற அம்மியடா ரூபஞ்சத்தி
பதிவிரதை தனைக்கண்டால் பாவம்போகும்
ஆனென்ற நவலோகந் தன்னைக்கேளு
ஆதியாய் நின்றநவ லோகந்தானே. (120)

தானென்ற பவம்நீக்கிச் சொர்க்கமீயும்
தற்பரா னந்தமே சாமிநாதா
மானென்ற விழிநாகம் பெயரைச்சொல்லும்
மருதியென்ற சுரைக்காயின் பெயரைச்சொல்லும்
தேனென்ற ராகமுத லெனக்குச்சொல்லும்
தெய்வமாஞ் சோதியெனுந் தெய்வத்துக்கு
பானென்ற பலவிருது பூண்டதேது
பணிகள்செய்யுங் கன்னியுட பேர்சொல்வீரே. (121)

சொன்னமொழி தவருத சுந்தரமேஅய்யா
ஜோதியென்ருல் சொல்வதற்கு நாவுமுண்டோ
பன்னுகக் தலையாட்டப் பிறந்தாரீசன்
பாருலகில் மூத்தவளே கன்னியாச்சு
என்னுளு மவரிடத்தி லிருந்தகன்னி
எழிதான சாமரையா ளென்பார்பாரில்
கண்ணுன மகுடியடா கண்டுபாரு
கனத்தமால் குடியிருப்பு யென்றுசொல்லே. (122)

யென்றுயெந்தன் நூல்பார்த்து யியம்பவேணும்
யெழிதான நாகமது யிரையோனுச்சு
கண்டுவந்த பலவிருதுங் கம்பளமேயாச்சு
கைலைவா ழீசனதி லொருவனுச்சு
பண்டுரைத்த சத்தமடா ரீங்காரமாச்சு
பாருலகில் சிகாரமடா யெழுத்ததாச்சு
கொண்டுவந்து வைத்தவர்கள் குலதெய்வமாச்சு
கோபாலர் தனக்குமவர் பிள்ளையாமே. (123)

பிள்ளையென்ற கல்லுளியின் பெயரைச்சொல்லும்
பிரபலமா யிருக்குகின்ற பெயரைச்சொல்லும்
தள்ளையென்ற தனுவுபல பெயரைச்சொல்லும்
தற்கமிட்டுத் தலையுடைக்கும் வகையைச்சொல்லும்
பிள்ளையென்ற ஆடதுபோற் கூடல்சொல்லும்
புகழ்ந்துவிளை யாடுகின்ற பாட்டுஞ்சொல்லும்
யெல்லையென்று விருப்பதுவு மெனக்குக்காட்டுங்
யியல்பாகக் கண்கண்ட குருவேஅய்யா. (124)

குருவென்று யெந்தனையுங் கேட்கவந்த
குலமகனே புலத்தியனே சொல்லக்கேளு
மருவொன்று மில்லாதான் கல்லுளியனுச்சு
மகத்தான சத்தியடா மடுதலாச்சு
கருவொன்று மில்லைகர்த்தன் வேறேயில்லை
காசினியி லவரவரே தெய்வமப்பா
அருஉருவாய் நின்றவனைத் தியானம்பண்ணி
அவரவர்க ளப்பாலே அறிந்துபாரே. (125)

அறிந்துபா ரென்றெனக்குச் சொல்லவந்த
அய்யனே யின்னமொன்று அருளக்கேளு
தெரிந்துகொள்ள யெந்தனுக்குச் சொல்லவேணும்
தெய்வதல மாயிரத்தெட் டுரைக்கவேணும்

பிரிந்துமே நின்றதொரு எழுத்துமென்ன
பிசகாமல் நின்றெழுத்து நிறமுமென்ன
பரிந்துமே யெந்தனுக்குப் பகரவேணும்
பரசமைய மாறுக்குள் ளிருந்தநாதா. (126)

நாதனு யிரத்தெட்டி லிருந்தநாதன்
நல்வினையுந் தீவினையுங் கண்டநாதன்
வேதமென்ற கடலுக்குள் ளிருந்தமூர்த்தி
வெளிவொளியாம் பரவெளிக்கு ளிருந்தநாதன்
மாதனென்று ஒருவனு யிருந்தனுதன்
மணியான மாசிலா மணிதானப்பா
பாதனென்றால் பாருலகம் படைத்தயீசன்
பண்பான மூலமடா பரிந்துபாரே. (127)

பரிந்துபா ரென்றுசொன்ன குருவேசுவாமி
பாருலகில் சதுர்மறைகள் வேறுமுண்டோ
அரிந்துபார் நம்முள்ளே ஐவருண்டானல்
அவர்களல்லால் தெய்வமது வேறுமுண்டோ
பரிந்துமே பார்த்தெனக்குப் பகுத்துச்சொல்லும்
பரமகுரு தேசிகனே யடியாருக்குத்
தெரிந்துமிக நடப்பதற்குத் தெளிவுகாட்டும்
தேசிகனே யென்குருவே தெட்சணுயா. (128)

தெச்சனத்தி லிருந்தவர்க்கு வகுத்தாரீசன்
தெரிவித்த படியுனக்குச் சொல்லக்கேளு
பச்சமில்லாப் பேர்களுக்குப் பகரவேண்டாம்
பரியாச மென்றோர்க்குப் பாழ்நரகங்கிட்டும்
அச்சமில்லா ஆயிபதம் பணிந்தபேர்க்கு
அம்புவியைத் தரித்தசிவ னருளேகாணும்
நச்சரவ மணிந்தசிவ னெனக்குச்சொன்னர்
நல்லவழி யிதுதானும் நடந்துபாரே. (129)

பாருமென்று யெந்தனக்குப் பகர்ந்தசாமி
பார்கிரந்த மேழுலக்ஷம் பாடினூர்யார்
காருமென்று சொல்வதற்கு விபரமென்ன
கைவிட்ட சூத்திரத்தின் விபரமென்ன
சேருமென்ற செந்தமிழ் பேருமென்ன
ஜெகதலத்தில் ரெண்டான விபரமென்ன
ஊருமென்று யெந்தனக்குச் சொல்லவந்த
உண்மைதனை யடியார்க்குக் காட்டுவீரே. (130)

காட்டுவீ ரென்றுசொன்ன புலத்தியாகேள்
கருமறைப்பாய்ச் சொல்லவில்லை யிந்தநூலை
பார்த்திடீர் பெருநூலில் பகர்ந்தவார்த்தை
பராபரையா ளங்குசமுந் தொடுசாமுங்கூட
ஆத்திடீ ரண்டமதின் வழக்கம்பார்த்து
அப்பாமே சட்டைமுனி தற்கம்பார்த்து
காத்திடுவீர் ஞானகுரு பதத்திலேதான்
கனிந்துமிக யிருந்திடுவீர் பனிரெண்டாண்டே. (131)

ஆண்டுபனி ரெண்டதுவு மடுத்துக்கார்த்தால்
அப்பவல்லோ அதிசயங்க ளெல்லாங்காணும்
நீண்டாத பேர்களுடன் சொல்லவேண்டாம்
திரிபுரையாள் பூஜையிலே திரமாய்நில்லு
வேண்டாத சிஷர்களைச் சேர்க்கவேண்டாம்
வெளியிலே யென்னூலைக் காட்டவேண்டாம்
பூண்டாசை கொண்டவர்க்கு பென்னூலீய்ந்தால்
புழுத்துமே சாகவென்று விந்நூலீயே. (132)

ஈயாதே யென்றுசொன்ன குருவேசாமி
யிப்புவியீ னியல்புசொன்னேன் சமயமாறும்
காயர்தே கனிபழுத்த வாருசொல்லும்
கர்மவினை யானதொரு விபரஞ்சொல்லும்
பொய்யாத சத்தமேக மேழுஞ்சொல்லும்
புகழ்ந்தகரு விகளுடைய விபரமோதும்
மய்யாத கைதேவர் வாழ்க்கையோதும்
மண்டலத்தில் பிரமமென்ற நிலையைக்காட்டும். (133)

காட்டுதற்கு யின்னமொன்று கருதக்கேளு
கர்மவினை யுடனுற்ற கர்த்தன்றானும்
மாட்டுமேலேறிவரு மார்க்கமென்ன
மங்கையிட பாகம்வைத்த விபரமென்ன
தேட்டிமையா மெர்தனுக்குச் செப்பவேணும்
தெளிவான அறுசமயம் பெயரைச்சொல்லும்
நாட்டிலே கீர்த்திபெற்ற யெம்மோனே
நன்றாக வென்தனக்கு நடத்துவீரே. (134)

நடத்தவே யின்னமொன்று சொல்லக்கேளு
நற்பணிக ளாபரண நடக்கைசொல்லும்
கட்டத்தவே காலடியி லிட்டதண்டை
கதித்தவிரல் மோதிரத்தின் பெயருஞ்சொல்லும்

படைத்தபணம் பொன்வெள்ளி பேர்தானென்ன
 பாருலக மதினாலே தனைத்ததேது
அடைத்ததொரு காரியங்க ளார்தானப்பா
 ஆதிவஸ்து வேயெனக்கு அருள்செய்வீரே. (135)

அறிவிப்பீ ரெனவுரைத்த புலத்தியனே அய்யா
 ஆனந்தத் தாண்டவனு ரெனக்குச்சொன்னார்
தெரிவித்த அறுசமயம் தெளிவாய்க்கேளு
 தேசத்தில் சமயமதிற் சைவமொன்றும்
மருவிப்பார் மாயனுடை சமையமொன்றும்
 மகத்தான சமனர்கள் சமயமொன்றும்
பருவிப்பார் மகமதியர் சமயமொன்றே
 பலகாலம் நின்றவீர சைவமொன்றே. (136)

சமயமென்றால் நால்சமயம் ஆறுமாச்சு
 சார்பான பிறச்சமைய மெனக்குச்சொல்லும்
அமையமென்ற தெவ்வாறு யெனக்குச்சொல்லும்
 அகிலமேல் யெழுமேகப் பெயருஞ்சொல்லும்
தமையனென்ற பெயரெனக்குச் சொல்லவேணும்
 தரணிதனி லெங்கேதா னிருக்காரய்யா
யிமையமென்று லிகபரம் மெனக்குச்சொல்லும்
 யிருப்பவர்க ளிறந்தவகை யியம்புவீரே. (137)

யியம்புமென்று கேட்கவந்த புலத்தியாகேள்
 யெதிரேநின் றூர்மாரன் தமையனாச்சு
பாம்பனையில் பள்ளிகொண்டோ னொருவனாச்சு
 பலபேருங் கொண்டாடு மாரியாச்சு
காம்பனைய மலைமார்பு தனுவுமாச்சு
 கதிர்மின்ன லிடிதூளி ஆழிவையேழும்
சாம்பனையே தொழுதவர்க்குக் கிட்டுமல்லால்
 சமயமென்ற பிறசமய மாறுங்கேளே. (138)

கேளப்பா புலத்தியனே மகனே அய்யா
 கெடியான துர்க்கையடா சக்காதேவி
வேளப்பா யெரித்தசிவ னெனக்குச்சொன்னார்
 வேதஅயன் பச்சைமாறி யானுளப்பா
காளப்பா செயவீர பத்திரனோடு
 நல்லான சமயமாறு மாச்சுதப்பா
தேளப்பா கொட்டும்விஷம் போலேயாறும்
 தெளிவாக உங்களுக்குச் சொன்னேன்மைந்தா. (139)

மைந்தனே யென்மகனே புலத்தியனே அய்யா
மதிகெட்ட மூடரிடஞ் சொல்லவேண்டாம்
சுந்தரம்போல ஞானவெளி கண்டுநீயும்
சுகம்பெறவே வேணுமென்றால் சொல்லக்கேளு
கந்தனையே என்னாளு மறக்கவேண்டாம்
கழுதையென்ற மூடரிடஞ் சேரவேண்டாம்
அந்தரத்தைக் கைகாட்டும் அசடருக்கு
ஆதிநூல் தற்கமடா யீயவேண்டாம். (140)

ஈவாத மூடரிடஞ் சேரவேண்டாம்
யிகபரங் கிட்டாது சொன்னேனப்பா
காயாது கனிபழுத்த வாறுஞ்சொன்னேன்
கனியாகிக் கீழ்விழுந்த வாறுஞ்சொன்னேன்
தேயாத மாரியுட பெயருஞ்சொன்னேன்
புகழ்பெரிய வேளாளன் விபரஞ்சொன்னேன்
ஓயாம லுலகரிடஞ் சொல்லவேண்டாம்
உயர்ந்துநின்ற சதாசிவத்தி னெழுத்தைப்பத்தே. (141)

பத்தென்று சொன்னகும்ப முனியே அய்யா
பரமகுரு தேசிகனே சொல்லக்கேளீர்
வித்தென்று சொல்வதற்குப் பெயர்தானேது
விதமான வாசனைக ளறிந்துகூறும்
மத்தென்ற வாசியுடன் கலந்தகாமன்
மயிர்விளைவில் லாவிபரம் பகரவேணும்
முத்தென்ற நவமணிக்கு வித்தே அய்யா
முதல்வனே யென்குருவே சொல்லவேணும். (142)

வேணுமென்று கேட்கவந்த மைந்தாகேளு
வேருக்குள் நின்றவனே கர்த்தனப்பா
காணுமென்ற வாசனைகள் கற்பமப்பா
கலந்துநின்ற மாயனடா காணுகாணு
பானுவென்ற பூண்டதிலே விளைவுண்டப்பா
புகர்ந்திட்டேன் வயித்தியத்திற் பாருபாரு
தானுவென்ற வானத்தி விருந்தவித்து
தரணிதனில் நவமணியா யமர்ந்தவாரே. (143)

வானென்ற ஜனங்களுக்கும் வானேவித்து
வழிபாடு தெரிந்தவர்க்கும் வானேவித்து
தானென்ற அண்டமதி லவனேவித்து
தரணிதனி லவனாக யிருந்தவித்து

கூனென்ற ஒளியெல்லா மவனேவித்து
கூறுபஞ்ச கர்த்தருக்கு மவனேவித்து
பானென்ற பரப்பிரம மவனேயாச்சு
பறையென்ற சத்தமடா விண்மண்ணாச்சே. (144)

ஆச்சென்ற பிரணவமே யென்குருவே அய்யா
ஆதியென்ற வேதமதை அறிந்துகூறும்
பேச்சென்ற மூலமதி லிருப்பதாரு
பேரிகைகள் முழக்கமிட விபரஞ்சொல்லும்
காச்சென்ற பாலதிலே வெண்ணெய்யேது
கடைந்தபின்பு மோரான விபரஞ்சொல்லும்
மூச்சென்ற உலகமது தன்னில்வந்த
மூதுரையின் பயனெனக்கு மொழிந்திடீரே. (145)

மொழியென்று யெந்தனையுங் கேட்கவந்த
மூதற்பிள்ளை யானதொரு புதல்வாகேளு
அரியென்ற வெழுத்ததிலே கலந்ததேது
அப்புவிலே தேயுவது கலந்ததெப்போ
பணியான சொல்லங்கே நின்றதெங்கே
பரசமைய மாறுக்குந் தெய்வமாறு
வழியான தெய்வமெங்கே பிறந்ததெங்கே
வரிசைபெறப் பூஜைசெய்யும் மார்க்கங்காட்டே. (146)

காட்டவே குருவருளைக் காட்டவேணும்
கலந்துநின்ற பூரணமே தெய்வமப்பா
மூட்டவே அரியெழுத்துச் சேரவிட்டால்
முழுமூட ரென்றல்லோ மொழிவார்பின்பு
வாட்டமில்லாக் குருவருளே வசனமாச்சு
வண்மைதருந் தேவியடா திரேகஞ்சத்தி
பாட்டடா மொழிந்தபடி விளக்குவாயென்
பாடலைக் குருவென்று பதனம்பண்ணே. (147)

பண்ணென்று உலகதனில் விகடப்பேரும்
பாரிந்த நாதாந்தப் பேருஞ்சொன்னீர்
மண்ணென்றும் மரமென்றும் வகுத்தயீசர்
மலைக்குறவர் பூணுகின்ற பிறகின்பேரும்
கண்ணென்று கன்னமிடும் கன்னக்கோலும்
கண்டுகலைத் தேகட்டும் வலையின்பேரும்
பண்ணென்ற பலமணிகள் பூண்டதேது
பலதொழில்கள் பாடுபட்டுத் திரிவாராரே. (148)

ஆரோவென் றெந்தனைக் கேட்கவந்த
அய்யனே புலத்தியனே சொல்லக்கேளீர்
மாரனென்ற குறவனுட மாயக்கூத்து
மங்களஞ்செய் தன்பான மூவர்தேவி
காரனென்று மிறகதுவே பூண்டமீசன்
காலையின்மே லேற்றினதைக் காணுயோகி
பேரனென்ற குறவனடா பெண்கள்வித்து
பேர்வெரியான் தாய்மாலை பூண்டான்காணே. (149)

காணென்று யெந்தனுக்குச் சொல்லவந்த
கண்ணுதலே யென்குருவே கருதக்கேளீர்
வீணென்றும் பேசாமல் விளங்கவேணும்
விதமான வாலையார் மணிகளாரு
காரினென்ற வலைக்குள்சிக்குங் கயல்களெல்லாம்
கற்பதரு வானதுவே யென்னதாரு
மாரனென்ற மான்தனக்குக் கன்னிகுத்தி
மதிமோசஞ் செய்தவகை வகுத்திடீரே. (150)

வகுத்திடீ ரென்றுசொன்ன புலத்தியாகேள்
வலையான மாயனடா வலையைவீசி
தகுத்திடவே முடிந்துவைத்தூர் தரணிதன்னில்
தனியான மணியல்லோ தேவராச்சு
அகத்திடவே உன்னுள்ளே அருவியப்பா
ஆறுமத்து மாறுறுங் கயர்களாச்சு
பகத்திடவே வலைவீசும் வலையனப்பா
பாரளந்த மாயனென்று பகரலாமே. (151)

பகராதே ஒருவருக்கும் மிந்தவார்த்தை
பாணனுட வாழ்க்கையது பகரக்கேளு
கதராதே வடேயடா தித்தித்தங்கக்
கைப்பிடித்துத் தட்டுதலே கண்ணனுக்கும்
அதராதே நீண்டதொரு பாணதானும்
ஆதியடா சங்கீத மறிந்துபாரு
சிதராதே நின்றதுவுங் கணேசனப்பா
தேசத்தில் கண்ணனுட கூத்திதாச்சே. (152)

கூத்தென்று யெங்களுக்குக் கூறவந்த
குருபரனே பின்னமுந்தான் கூறக்கேளீர்
மாத்தென்று மில்லையப்பா மரத்திலேதான்
முயனின்ற மரமேது வகுத்துச்சொல்லும்

பாத்தொன்று மில்லாத யிலையிலேதான்
    பத்தினியாள் சூடியிருந்த யிலையைக்காட்டும்
சாத்தொன்று மானயிலை யதனைக்காட்டுஞ்
    சதுரான மூலமதைச் சொல்லுவீரே. (153)

சொல்லென்று மெந்தனையுங் கேட்கவந்த
    சொற்பெரிய புலத்தியனே விளம்பக்கேளு
பல்லென்ற பலவிஷங்க ளெல்லாந்தீர்க்கப்
    பார்தனிலே பரவேம்பாய்ப் பிறந்தாளாத்தாள்
கல்லென்ற சிலையாகி மூலமாச்சு
    கதித்தயிலை யாணுகுங் கண்டுபாரு
பல்லென்று சேர்த்ததுவே பெண்ணதாகும்
    பருமூல மாயிருந்து பரனைப்போற்றே. (154)

போற்றவே யின்னமொன்று கேளுகேளு
    பொருமையுள்ள ஆலயத்தில் மனுக்கள்சூழ்ந்து
சாற்றவே கைதட்டிச் சேவைசெய்யும்
    தாட்டிமையை யின்னதென்று காட்டவேணும்
காத்தவே கனிவைத்து யெடுப்பதேது
    கனியிதற்கு ளறுசுவையுங் காட்டவேணும்
பூத்தவே புதுமைகளைச் சொல்லவேணும்
    புதுமையுள்ள கனியின்பேர் புகழ்ந்திடீரே. (155)

கனியான கனியல்லோ வசியஞ்சித்தி
    காசினியோர் மனக்காட்சி கையைத்தட்டல்
பிணியான பிணியதுவுந் தீரவப்பா
    பேயான மனக்கவடு திறமதப்பா
மணியான வித்தல்லோ சிகாரமாச்சு
    மந்திரத்தால் நின்றதடா அகாரமாச்சு
தனியான சடாட்சரமோ டாறுமைந்துந்
    தயாசக்தி யினுமிச்சம் பழமுமாச்சே. (156)

பழமான பழமதிலே விதைதானுரு
    பதியிருந்த மூலமதில் தெய்வமாரு
கழுமான் நிஷ்களத்தில் தெய்வமாரு
    கலந்துநின்ற நிணங்களின் பெயரைச்சொல்லும்
சழமான சாகரஞ்சம் சாரமாரு
    சஞ்சலத்தை யூடறுத்த தியமாரு
தலமான தலந்தனிலே சமுசாரஞ்செய்யும்
    சட்டமதை யின்னதென்று சாற்றுவீரே. (157)

சாத்தவே யின்னமொன்று சொல்லக்கேளீர்
சதுரான ஐம்பூதம் மதுக்குண்டாமோ
மாத்தவே கருவிகளு மதுக்குண்டாமோ
மறைநான்கு மோதுகின்ற மனைவியாமோ
பாத்தவே ரகலுமடா வேறேஞானம்
பராபரையாள் தனக்குமது பணிகளாமே
ஆத்தவே திருமன மதுக்குண்டாமோ
ஐந்தெழுத்து மூன்றெழுத்து மதுக்குள்காட்டும். (158)

காட்டுமென்று யெந்தனையுங் கேட்கவந்த
காதல்கொண்ட புலத்தியனே சொல்லக்கேளீர்
ஈட்டுமே லேறுமந்த யீசன்சொன்னர்
மறைநான்கு மதில்சரம்பு மாகும்பாரு
யெட்டெழுத்து யென்றுசொன்ன வாருதானும்
இனுமிச்சம் பழந்தனக்குச் சொல்லுவார்கள்
பாட்டிலே பலவிதமாய்ச் சொல்லுவார்கள்
பழிகாரப் படுகுழியில் தள்வார்காணே. (159)

காணவே தேவிதனைக் காணவேணும்
கதிர்சாய்கை மதிசாய்கை யறியவேணும்
பூணவே வன்னிநிரை பூணவேணும்
புதுமையுள்ள வேதாந்தங் கற்கவேணும்
பேணவே பெண்டீரைத் தள்ளவேணும்
பேசுகிற மந்திரத்தைக் காணவேணும்
மானமில்லார்க் கென்னாலேக் காட்டவேண்டாம்
மரியாதை யில்லார்தன் னுறவைத்தள்ளே. (160)

தள்ளென்று யெந்தனுக்குச் சொல்லவந்த
தானுவே யென்குருவே போற்றிபோற்றி
கள்ளென்று சொல்லவந்த பெயர்தானென்ன
கள்குடிக்கு மாந்தரவர் யெபருமென்ன
நில்லென்ற மரமேது மாத்தின்பேரும்
நிலவரமாய்ப் பூச்சீவும் சாணன்பேரும்
தள்ளென்று தள்ளுகின்ற தள்ளுவானும்
சாதிக்கும் பலதிற்கும் பகருவீரே. (161)

பகருமென்று யெந்தனையே கேட்கவந்த
பத்தியுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
மகரமென்ற கொடியிருக்கு மாரன்கள்ளு
மரமேறுஞ் சாணனே மந்திமந்தி

அகரமென்ற எழுத்தாலே அதங்கிட்டலாச்சு
அவனடிக்கு மடியல்லோ வாயுவாச்சு
சிகரமென்ற கோபுரத்தி லாடுமர்த்தி
சிகரமடா அகரமுதல் தெளிந்துகாணே. (162)

தெளிவான லிங்கத்துள் ளிருந்தவல்லி
தேசத்தில் விசமதிகள் கவர்ந்ததேது
பழிபாவந் தீர்க்கவந்த பரையின்மூலம்
பாரிலே பிதுவிபரம் பகரவேணும்
வழியறிந்து நடந்துகா ணேன்காணுத
வலக்காடு காத்தவபி ரவனூர்பெயரும்
சலியாமற் குமித்தபோர் விதையாரய்யா
சச்சிதா னந்தவெள்ளச் சாமிநாதா. (163)

வெள்ளமென்ற பேரின்பங் கற்றபேர்க்கு
மேலான புலத்தியனே விளம்பக்கேளு
கள்ளமென்ற மாரீனுட அடிமூலமப்பா
காலகண்டி நீலியுவ ளிருந்தாளப்பா
மெள்ளவே வழிமறித்தான் கணேசனுகி
மேலான மசானமடா ருத்திரன்காவல்
அல்லல்வினை தீர்க்கவல்லோ அய்யர்தாமும்
ஆதிவித்து விளைவாகி யிருந்தார்காணே. (164)

காணவே யென்குருவே கருதக்கேளீர்
கைபார்க்கும் பண்டிதனூர் கயர்தானுரு
பூணவே நால்வாசல் வீடாருக்கு
புதுமையுள்ள வாசல்நா லிருந்தோராரு
தோணவே அவர்களுட வாசல்தன்னில்
தொழில்செய்யுந் தொழிலாளி நால்வராரு
நாணவே யவர்தனக்கு வெட்கமேது
நாணயத்தில் தோற்றமேது கேட்கச்சொல்லும். (165)

கேளென்று கேட்கவந்த புலத்தியாகேள்
கெம்பீர மானதொரு யீசனூரும்
தெளிப்பாகச் சொன்னதொரு வைத்தியமப்பா
கட்டிநின்ற பாசமடா கயாதாகும்
பழிம்பான நால்வாசல் வீட்டுப்பேரும்
பரையான வேதமடா பரிந்துபாரு
வழிபாடு கண்டறிந்தா லவனேவேதம்
வகையான வீடல்லோ பேதனமாச்சே. (166)

பேதனத்தி னெழுத்தல்லோ பேசக்கேளு
பேர்பெறவே யெட்டெழுத்து மெட்டுங்கூடி
பேதனத்தால் வலம்புரியாய்ச் சுத்தியல்லோ
பெருமையுள்ள கயராச்சு பேசக்கேளு
பேதனத்தாற் கெலிப்புடனே தோப்புமாச்சு
பேசரிய கிறமல்லோ பேசக்கேளு
பேதனத்தால் நாலுமொன்று ஐந்துமாச்சு
பேசுகிறேன் சொல்கேட்டால் நன்றுபேசே. (167)

பேசவந்த வென்குருவே சாமிநாதா
பேரின்பங் கற்றவர்க்கு வேணுமோசொல்
வாசவனுங் கேசவனு மதிலேயுண்டோ
வர்னமென்ற ஐந்துவர்ன மதிலேயுண்டோ
பாசமெனும் பரப்பிர்ம மதிலேயுண்டோ
மலநாளு மாடுகிற தெளிவுமுண்டோ
மோசமென்ற தொழிலதுவு மதிலேயுண்டோ
மொய்குழலார் தன்மாய்கை யுண்டோசொல்லே. (168)

சொல்லென்று மென்தனையே கேட்கவந்த
சொற்பெரிய புலத்தியனே கேளுகேளு
கல்லென்ற சத்தமடா அதிலேயுண்டு
காமியென்ற பெண்ணுமடா அதிலேயுண்டு
பல்லென்ற பலபாஷை யதிலேயுண்டு
பழிகார ராடுகின்ற ஆட்டம்பாரு
வில்லென்ற வேலவனு ராடுமாட்டம்
வேதாந்திக் கும்பிறமை தீர்க்கும்பாரே. (169)

பராபரமே யென்குருவே பணியக்கேளு
பார்த்ததிலே சதுரங்கம் வந்ததேது
சராசரமாய்ச் சதுர்மாத ரிருப்பதேது
சகடையுடன் காலாளும் வந்ததேது
கிராமயமாய் நின்றவன்போற் காயுமேது
நிதியான யானையுடன் குதிரையேது
தாரதரமாய்ப் பூதாளம் வகுப்பதேது
தனித்தனியா யெந்தனுக்கு உரைசொல்வீரே. (170)

சொல்லுவீ ரென்றுசொன்ன பிள்ளாய்கேளு
சொற்பெரிய சதுரங்க விபரந்தன்னை
நல்லுறவா யாடுகின்ற தொழிலைக்கேளு
நமனொருதன் நாரயண னொருத்தனப்பா

வெல்லுதற்குச் சதுரங்கம் சேனையப்பா
வேதனுடன் ருத்திர னு மயேஷனுச்ச
அல்லுறவே அறுபத்து நாலுசித்தும்
ஆடுகிற தொழிலாளி யாடுவானே. (171)

ஆடவே திருக்கூத்து ஆடவேணும்
அம்பலத்தி லகமடக்கி நிற்கவேணும்
பாடவே பராபரையைப் பாடவேணும்
பத்தியுட னெருமலரைக் கொய்யவேணும்
நாடவே சிவன்பதத்தை நாடவேணும்
நன்மையுட னேர்மனதாய்க் கூடவேணும்
கூடவே குருபதத்தைக் கூடவேணுங்
குருவினுட அருளாலே காணுவாயே. (172)

காணுமென்று மெந்தனக்குச் சொல்லிவந்த
கண்ணுதலே யென்குருவே சொல்லக்கேளு
தோணுமென்று தோணுகிற தோற்றஞ்சொல்லும்
தொல்புவியிற் பருவமென்ற மார்க்கஞ்சொல்லும்
ஆணென்றும் பெண்ணென்றுந் திரிவதேது
ஆகாசந் தன்னிலவர் வாழ்வதேது
பூணுமென்ற பூணாக் தன்னிலாரு
புருஷனென்றும் பெண்டென்ற புதுமைகாட்டே. (173)

காட்டுமென்று மெந்தனைக் கேட்கவந்த
கருத்துள்ள புலத்தியனே சொல்லுக்கேளு
நாட்டுமென்று நாட்டிவைத்த உலகுதன்னில்
நல்வினைக்குந் தீவினைக்கு மவரேயாவார்
பூட்டென்றுந் தாயவளு மவரேயாவார்
புகழான சற்குருவு மவரேயாவார்
பாட்டென்றும் படிப்பென்று மவரேயாவர்
பரியாசம் போலல்லோ பகர்ந்தேன்பாரே. (174)

பாரப்பா யின்னமொன்று பகரக்கேளு
பராபரைக்கு உறக்கமில்லை பசியுமில்லை
ஆரப்பா யென்னால்போற் சொல்லப்போறார்
அய்யருக்கு மப்படியே யாகும்பாரு
காரப்பா குருவருளாற் காணவேணும்
கருத்தாலே காண்பதல்லால் காணப்போமோ
சாரப்பா ஆசானைச் சார்ந்துகாரு
சார்ந்திட்டு யெந்தனுக்குச் சொல்லுவீரே. (175)

சொல்லவே லெகுவாகச் சொல்லவந்தீர்
சொற்பெரிய தாபரத்தில் பெரிதுசொல்லும்
வல்லார்க்கு வல்லவனு யிருந்தாரு
வடிவான பெண்மாய்கை மயக்கங்காட்டும்
அல்லவர்க்குத் தெய்வமென்று யிருந்தபின்பு
யாவருக்கும் வெவ்வேறாய்ப் பிரிந்ததேது
யல்லவர்கள் பலவிதமாய்த் தியானமேது
பலபாஷை பதினெட்டும் வந்ததேதே. (176)

வந்தவித மின்னதென்று புகலக்கேளு
வல்லவனு யிருந்தசதா சிவனுமப்பா
விந்தமதிற் பள்ளிகொண்டான் தன்னாலப்பா
விதமான மாய்கையடா விரும்பிப்பாரு
அந்தமுள்ள ஆணாக யிருந்தயீஷன்
அருமையுள்ள பெண்மாலா யிருந்தாரப்பா
சந்தமுடன் தாபரமா மாசுவேம்புக்
தனித்தனியே நின்றாக்காற் றர்மமில்லை. (177)

தருமமல்ல வென்றுரைத்த தாணுவேகேள்
தாரணியிற் காவியென்ற வஸ்திரமாரு
கருமமெல்லாக் தீர்த்தசிவ காலையாரு
கருத்துடனே சந்தனங்கள் புஷ்பமென்ன
வருமமெல்லா மதில்வயித்திய மார்க்கமென்ன
வாலைசன்னி யாசமென்றால் நிற்காதென்ன
நிருமலமா தாய்நிறைந்து திரிவதென்ன
நீதியுடனெந்தனுக்கு நிலைசொல்வீரே. (178)

சொல்லுவீ ரென்றமென்னைக் கேட்கவந்த
சுந்தரமே சொல்லுகிறேன் கேளுகேளு
அல்லலற நின்றதொரு ஆத்தாளப்பா
அம்பலத்தான் தனக்கியந்தான் யாருபாரு
கல்லுறவே கற்பதற்குக் கையில்மாலை
காளகண்டன் கண்டமடா கண்டுபாரு
சொல்லுறவே சொல்வதற்குச் சோதியான
சொற்பெரிய சந்தனமு மாளுள்பாரே. (179)

பாரேநீ யென்றுசொன்ன குருவேஅய்யா
பகருவே னின்னமுந்தான் பகரக்கேளும்
ஆரென்ன கேட்டாலு மவர்தானென்றீர்
ஐந்தெழுத்து மெட்டெழுத்து மவர்தானுமோ

யாரேநீ சொன்னதெல்லாம் பகுத்துபாரு
பராபரையா ளென்னுச்சி யிருந்தமார்க்கம்
சேரேநீ யென்றுசொன்னீர் சேர்த்துப்பார்த்தால்
ஜெகசாலக் கூத்தாக யிருந்தாளாத்தாள். (180)

ஆத்தாளைப் பூஜைபண்ண விபரஞ்சொல்லும்
அம்பலத்தான் தனைக்காண மார்க்கஞ்சொல்லும்
பார்த்தீர்லோ சிறுபெண்ணு ளென்றுசொன்னீர்
பக்குவத்தை யின்னதென்று பகரவேணும்
சேர்த்தாலோ சிவனுமையுஞ் சேர்க்கச்சொன்னீர்
ஜெகமாய்கை யென்றதெல்லாந் தள்ளச்சொன்னீர்
பார்த்தாலோ முப்புரத்தைத் தீயதாகப்
பார்க்கவதை யின்னதென்று வசனிப்பீரே. (181)

வசனிக்க வேணுமென்று கேட்கவந்த
வணக்கமுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
வசனித்த சத்தமெல்லாம் வாயுவாச்சு
வழிகாணுங் கோபமெல்லா மக்கினியேயாச்சு
வசனித்த அப்பல்லோ கெருவமாச்சு
வணங்கினின்ற தொழிலெல்லாம் பிருதிவாச்சு
வசனித்த ஆகாச மழகுமாச்சு
வழிமுன்னே சொன்னதற்கு விபரங்காணே. (182)

காணென்று சொல்லவந்த சாமிநாதா
காரணமாஞ் சற்குருவே அய்யாஅய்யா
ஊணென்று முறக்கமென்றுஞ் சொல்வதென்ன
உண்மைகுடி தெய்வமென்று உரைப்பதென்ன
மானென்ற விழியாளைப் பிடித்தாலையா
மங்கைதனி லேவைத்துப் பார்ப்பதென்ன
வேனென்ற மதன்கல்வி யதுக்குமுண்டோ
வேதியன்போ லோதும்பூ சாரியாரே. (183)

பூசாரி யாரென்று கேட்கவந்த
புலத்தியனே யென்மகனே புகலக்கேளு
ஆசாரி பிரசையல்லோ அவளுமாச்சு
அம்மையுட புத்திரனு மவனுமாச்சு
பேசாரி நின்றவளு மகளுமாச்சு
பேசுகின்ற ஊணுறக்கம் உறவுமாச்சு
வாசாரி வழக்குரைத்தா னெருவனென்று
வழியறியா மூடர்களு மயங்குவார்கள்
காசாரி விழுந்துதென்றால் கண்ணிற்காணுங்
கழுதைக்குற லோசைகாதிற் கேட்கும்பாரே. (184)

கேளப்பா யிதுகளெல்லா மூலகுதன்னில்
கேள்வியில்லே வியாசரவர் கட்டிப்போட்டார்
காளப்பா கழியாமற் பிறந்துமாய்ந்தார்
நல்வழியைத் தேடாமல் நரகில்வீழ்ந்தார்
பாளப்பா பருமலரைக் கொய்துவந்து
பராபரத்துப் பாவைதனைப் பணிந்துபின்னும்
வாளப்பா யிரைதேடித் திரிந்தாப்போலே
வாழ்வேந்தர் கன்னியடா மந்தைகாணே. (185)

மந்தையிலே ஆட்டிவைத்த பூசாரிதானும்
மதிகெட்டா னவன்தானு மொன்றுங்காணன்
சந்தையிலே கண்டவன்போற் பேசுவான்பார்
சாட்சிவைத்துப் பேசுதற்குச் சலிக்கமாட்டான்
தந்தைதா யானாலுந் தள்ளமாட்டான்
தற்கமிட்டுத் தலையசைத்து விழிமிரட்டி
விந்தையாய் வெண்ணீறை யீவானப்பா
வீம்பான மூடரவர் அனாதிதானே. (186)

அனாதி யாயிருந்த யீசர்தானும்
அம்பிகையாள் தனைப்பார்த்துப் பறைச்சியென்றார்
அனாதியாய் நின்றபரை யுலகுதன்னில்
ஆச்சியா மிவர்தனக்குப் பிறந்தாள்காமி
அனாதியாய்ப் பலதொழிலா யிருந்தபேர்க்கு
பதவியென்ற மூலமதா யிருந்தாள்கன்னி
சேனாதி சேனைபடை யெடுத்தவர்தர்
ஜெகசாலக் கூத்தாக யிருந்தாள்நீலி. (187)

நீலியென்ற கன்னியடா காட்டிற்தெய்வம்
நிமலனார் புதல்வனடா ஐயனாரு
காளியென்ற துர்க்கையுட னையன்கூடிக்
கன்னிகையாள் மாரியாய்ப் பிறந்தாரப்பா
கூளியென்ற குறைத்தலைப் பேய்களெல்லாம்
கூட்டுறவாய்க் கூட்டியே உலகுதன்னிற்
பேளியென்ற மார்க்கமதைப் படைத்துவைத்துப்
பிரபலத்தைக் காட்டிவைத்தார் பிர்மந்தானே. (188)

பிரமமுனி தவத்தாலே உலகுதன்னில்
பிரபலமாய் நின்றார்கள் பெரியோரப்பா
கர்மவினை தீரவல்லோ கைலைநாதர்
காசினியிற் சித்தம்பலம் படைத்தாரீசன்

வர்மமதைச் சாதித்துக் கமலநாதர்
வழிபாடு தெரியாமல் மார்க்கங்காட்டி
தர்மமே தெரியாத தருதலைகள்
தலைகீழாய் வேதமதைப் படைத்தாரய்யா. (189)

அய்யாவே யென்மகனே சொல்லக்கேளு
அறுசமைய மாடுகள்தா னடங்கப்போமோ
மெய்யாகச் சொல்லுகிறேன் வேதமப்பா
மெய்காணக் குருடரைப்போல் விளம்புவார்கள்
கய்யாரச் செய்கின்ற கருமங்காணர்
காசினியில் வல்லவர்கள் கலக்குவார்கள்
மய்யாரும் கன்னியர்தன் னுறவினாலே
மதிமோச மாகியல்லோ மயங்குவாரே. (190)

வாரான வுலகதனில் மயக்கமாக
வழிகாட்டும் வண்டருட வுறவுதள்ளு
தாரான அண்டத்திற் தாயைப்போலே
தாய்கிட்டு மென்றுரைத்த தருதலையைத்தள்ளு
போரான பேய்தெய்வ மென்றுசொல்வார்
பேய்பிடித்த ஆண்டியுட பெருமைகாணர்
சீரான தற்கநூல் சொன்னேன்யானும்
சிறப்பாகு முலகத்தின் வாழ்க்கைதானே. (191)

வாழ்க்கைபடா தேவர்முனி வருக்குமுண்டு
வழிகாணு மூடருக்கு யில்லையப்பா
கேழ்க்கையிலே கிறவனு யிருந்தாரப்பா
கேள்விகொண்டு வந்தபின் குமாரனுர்
வாழ்க்கையிலே பலதெய்வ முண்டுபாரு
வழிகண்டா ரெல்லோர்க்குந் தெய்வமில்லை
கேழ்க்கையிலே வேளாளன் கிலைபைகாட்டி
கெம்பீர மாபிபதம் தொழுதான்பாரே. (192)

தொழுதல்லோ வேப்பிலையில் காப்புக்கட்டித்
தோத்திரமும் பூஜையது செய்தபேர்க்கு
பழுதொன்றும் வாராம லிருந்துகார்த்தான்
பராபரைக்கு முகந்தபிள்ளை யவன்தானப்பா
மழுவெடுக்க மனந்துணிந்து யிருந்தானப்பா
மாடுமேய்க்கப் போனிடத்தே மகிழ்ந்துகண்டான்
தழுக்கெடுத்த பளிங்குமலைச் சார்புதன்னில்
தாயாரைக் கண்டெடுத்துப் போற்றிசெய்தான். (193)

செய்யவே வேம்படியி லிருந்தாளாத்தாள்
சிறுபிள்ளை யவன்வீட்டு வேலைக்காரி
மையவே நோய்பிடித்து வந்தபேர்க்குப்
பச்சிலையும் வெண்ணீறுங் கொடுக்கச்சொன்னாள்
நொய்யவே வந்தநோ யெல்லாந்தீர்த்து
நோன்புபல விரதங்க ளெல்லாஞ்சொன்னாள்
மையாடுங் கன்னியின்மேல் வருவேனென்றாள்
மதிமயக்க மாகவல்லோ திரிகுவாளே. (194)

குலவையிட்டுக் கூக்குரலுஞ் சத்தத்தோடே
கூசாம லில்லறத்திற் பூஜைகொண்டு
அல்கையென்ற பேய்களுக்குக் கொடுத்தபின்னும்
அம்பூகுறி கும்பத்தி லடங்குவேனென்றாள்
அலகையென்ற பூதகணந் தன்னைச்சேர்த்து
மானிலத்திற் தெய்வமென்று திரிந்திட்டாள்பார்
பலகையென்ற மேருவதை யவனுக்கீய்ந்து
பலகாலம் பூசிக்கப் பூசித்தாள்பாரே. (195)

மாரப்பா பத்திரங்கள் சாத்திப்பின்பு
பணிவிடைகள் செய்ததற்குப் பலனைக்கேட்டான்
காரப்பா குருவருளால் சித்துடுக்கீய்ந்து
கனிசொல்லப் பொற்பிரம்பு யீய்ந்தாளாத்தாள்
ஆரப்பா அவுள்சடைதான் பிரம்புமாச்சு
அண்டபிண்ட முஞ்சேர்ந்து உடுக்குமாச்சு
சேரப்பா யீசன்மால் சக்கரத்தைக்கூடச்
சேர்த்தபின்பு திரிபுண்ரவா ளுடுக்குமாச்சே. (196)

மாச்சப்பா சக்கரத்தை அதனிற்சேரு
மைந்தனே மண்ணடங்காச் சூத்தங்காணும்
மூச்சப்பா கொள்வதன்முன் குபேரன்தன்னை
மூகமான மேல்தட்டு தன்னில்வைத்து
பாச்சப்பா ஞகமென்ற கயருகொண்டு
பஞ்சகர்த்தா ளைவருமே யிடைவாருக
காச்சப்பா கண்ணனுடன் ருத்திரன்கூட
கைலைமலை பெற்றுனைக் கலந்துகொள்ளே. (197)

கலந்தபின்பு காராளன் கையுடுக்குமாச்சு
கதிரடித்தா லேயள்க்கும் படியுமாச்சு
அளந்தபின்பு அவன்கையி லிருந்திட்டாக்கால்
அண்டபகி ரண்டமெல்லா மளக்கும்பாரு
சலந்தனிலே ஈப்புகுந்தால் நீஞ்சுமோசொல்
சஞ்சலங்க ளுடருந்த சிமைமாறும்
பலந்தனிலே யிதுபலனைக் காணவேணும்
பாக்கியம்வேண் டாதார்க்குப் பரமஞானம். (198)

ஞானவான் தனக்குமவள் தெய்வமானுள்
நானிலத்தைக் கார்க்கவல்லோ மாரியானுள்
வானவட வாக்கினிக்கு நின்றசத்தி
வழிமறித்து வழிகாட்டிப் பூஜைவாங்க
தானமென்ற தானமெல்லா மிருந்தகன்னி
தையலற்குத் தையலா யிருந்தாளாத்தாள்
கோணமென்ற கோணமெட்டி லிருந்தகன்னி
கோதையரைக் காணுத கொடுமைதானே. (199)

கொடுமையென்று சொல்லிவந்த குருவேஅய்யா
கோதையென்ற கன்னியர்க ளெழுவாரு
அடுமையென்று பேர்படைத்துத் திரிவதாரு
ஐவரென்ற ராசாக்கள் தனக்குமுன்னே
படுவரென்ற பட்டவர்த்த னர்களாரு
பாரதத்தில் மாண்டதுவாய்ச் சொல்வதேது
நடுவிருந்த தெய்வமென்று சொல்வதாரு
நல்லபதம் பெற்றஐவர் தெய்வமாமோ. (200)

தெய்வமென்று கேட்கவந்த புலத்தியாகேள்
தேவியென்ற மனோன்மணியாள் சிருஷ்டிப்பாலே
தெய்வகன்னி யெழுபேரும் பிறந்தார்பாரு
தேசத்தில் சத்தமாத ரென்றுபேரு
அவமென்ற அவையடக்கந் தன்னுல்மைந்தா
அவரவற்குத் தெய்வமா யிருந்தாளாத்தாள்
கலமென்ற காளிகன் னடிமலையாச்சு
கதிர்சாய்கை மதிசாய்கை ரெண்டுமக்கே
தவமென்ற தவத்தாலே காணவேணும்
தாயைவிட வேறுமுண்டோ தவத்தோருக்கே. (201)

தவத்தாலே பெரியோர்கள் தாயைக்கண்டார்
　　தனியான கன்னியர்கள் ஏழுபேரும்
அவத்தாலே அவரவர்க ளுலகுதன்னில்
　　ஆரணியத் தோருமே அலைந்தாரப்பா
தவத்தாலே கண்டவர்கள் கோடாகோடி
　　தனியான லாடர்தன் முனிவன் தானும்
தவத்தாலே சகலசித்து முடிக்கவென்று
　　தங்கைமா ரெழுவருட னிருந்தார்காணே. (202)

யிருந்தார்க ளவரவர்க ளொருசமையமாக
　　யிருளறுக்குந் தெய்வமென்று யிருக்கத்தானும்
மறந்தார்க ளவருமே போனபின்பு
　　மதிகெட்ட மூடரவர் மாண்டபேரை
யிறந்தவர்கள் வந்தார்க ளென்றுசொல்லி
　　யிரவுபகல் கொண்டாடிக் குலவையிட்டு
பறந்தவர்கள் பலகாலம் பறக்கமாட்டார்
　　பாடுவழி வந்தபின்பு பார்ப்பாரய்யா. (203)

பார்க்கவே பகவதியா யிருந்தாள்பாரு
　　பரசமய மாறுக்குள் ளிருந்தவல்லி
ஆர்க்கவே ஆதார மானுளாத்தாள்
　　ஐம்பூத மதினுறவா யிருந்தாள்பாரு
மார்க்கமதை யின்னதென்று சொல்லப்போமோ
　　மணிநாகம் போலேயல்லோ மகிழ்ந்தகன்னி
தீர்க்கமதை யின்னதென்று செப்பக்கேளுந்
　　திரோதாயி கூத்தெல்லாஞ் செப்புவோமே. (204)

செப்பவே ஜெகசால மிதுவேயாச்சு
　　செய்யவே அயோத்தி தன்னிலப்பா
அற்பழியா மாதர்கள் மெத்தவுண்டு
　　கைலைக ளென்பதுவு மதுவேயாச்சு
ஒப்பாரு மில்லாத கன்னியோர்கள்
　　ஒகோகோ அவர்களெல்லாம் உலகுதன்னில்
மெய்ப்பாக ருத்திரா ரம்சமாக
　　மேலான பதவியிலே நின்றார்பாரே. (205)

திற்கவே அம்பலத்தில் நடனங்காண
நிலவரையிற் பதுங்கெல்லோ நின்றாரப்பா
தக்கவே ருத்திரனார் பார்த்தும்பின்னும்
தாண்டவனா ருத்திராய் நின்றாரப்பா
மெய்க்கவே கன்னியர்க ளேழுபேரும்
மேலான பதவிவிட்டு விண்ணுக்குள்ளே
வேர்க்கவே திரிந்தார்கள் வெளியிலேதான்
வேதனெனும் பிரமனுக்குச் சிவன்சொன்னாரே. (206)

சிவன்சொன்ன மார்க்கமதைச் சொல்லக்கேளு
சிறுகன்னி யெழுபேரும் ஜெகத்தின்மீதில்
அவர்சொன்னார் பேய்போலே திரியவென்று
அருள்செய்த படியாலே தேவிகூடல்
திவனென்ற தெர்ப்பையதைக் கையிலேந்தி
திலகமிட்டு காடுதனிற் திரிந்தார்பாரு
பவனென்ற செம்படவன் வீட்டிலாத்தாள்
பழிவாங்க வெனப்பிறந்தா ளென்தாய்தானே. (207)

தாயான தாய்வந்து பிறந்தபோது
தையலர்க ளெழுபேரும் பிறந்தாரப்பா
மாயான மயானருத் திரன்பிறந்தான்
மாநிலத்தில் மீனவனை செயிக்கவென்று
பாரான பூமியது குலுங்காமற்கார்த்த
பாலகரெட் டிப்பேரும் பணிசெய்தார்கள்
காயாமல் பழம்பழுத்த கரியமாலும்
காணிக்குக் குறிசொல்லக் குறத்தையானார். (208)

குறிசொல்லக் குழைக்கதையென்று வந்தமாயன்
கூசாம லவள்மடியி லிருந்துபின்னும்
அரியென்ற பெழுத்தறியான் வல்லான்தன்னை
அம்மையடா கொண்டுபின் முறத்தில்வைத்தாள்
குறியென்ற நகக்குறியால் வயற்றைக்கீறி
குடலைப்பிடுங்கி மாலையிட்டாள் குமரியப்பா
பிரபலமாய் ரெண்டாக வகுந்துசேர்த்து
பேசரியப் பப்பளையதாய்ச் செய்தாள்பாரே. (299)

சேத்ததொரு பப்பைபடா யிடம்பையாக
ஜெகசால உலகமெல்லாந் திடுக்கென்றென்ன
காத்ததொரு மூக்கனுங் கபாதாகக்
கரியுமா னுந்தியடா பிரமமென்று
யேத்ததொரு அடிக்கொம்பு ருத்திரனப்பா
யெதிர்கான வலையம்கால் யெதிரிக்கட்டை
பழர்த்தலதை யானறிந்து உனக்குச்சொன்னேன்
பண்பான மலைமகள்தன் கூத்தத்தானே. (210)

தானென்ற கூத்தாலே யெல்லாமாச்சு
தாணியிலே தாய்சமயம் பெரிதுமாச்சு
வானென்று முறவென்று மிவர்கள்கூட்டம்
உத்தபக்தி யிருபத்தி ஒன்றுமாச்சு
தேனென்ற செம்படத்தி வேடம்பூண்டு
தெருவிலே வந்தல்லோ திரிந்தாள்பாரு
மானென்ற காகமதைத் தரித்தயீசன்
மாசற்ற பிரமமென்று யிருந்தார்பாரே. (211)

பார்க்கவே அவள்பூண்ட வேடந்தானும்
பழிகாரி போலேயவள் திரிந்துபின்னும்
மார்க்கமதைக் காணுத மூடர்தானும்
மலையனு ரெல்லையிலே பிறந்தாளென்பார்
ஆர்க்கவே அவதரித்தா ளந்தவூரில்
ஐந்தனுள் போனபின்பு சுருதியானுள்
ஏர்க்கவே பேர்படைத்து அசுரர்தன்னை
யீடாவே பிரமைகொண்டு யிருந்தார்பாரே. (212)

யிருந்தயிட மவனூரை மசானமாகி
யேகாந்த ரூபமதைப் பண்டதங்பின்னும்
அருந்தவத்தோ ரமுர்தமது கடையும்போது
ஆனுரு மமுர்தமென்று விஷத்தையுண்டார்
பொருந்தவே விஷமுண்ட யீசனுரும்
பெலியிரந்து வுண்டகூத்து யிதுதானப்பா
வருந்தவே வந்தவகை யெல்லாஞ்சொன்னேன்
வழிகாணு மூடருக்குச் சொல்லவேண்டாம். (213)

வேண்டாத நஞ்சுண்ட ருத்திரன் தானும்
வேதனுட சிரசறுத்த குருநாதன்ருன்
தாண்டவியாள் தனைப்பெற்ற அயோத்திவிட்டு
தக்கனைப்போற் சூரனைத்தான் வதைத்தமார்க்கம்
ஆண்டவனு ராடியதோர் கூத்திலப்பா
அங்கையென்னுந் திரிசூலி யானுள்பாரு
வேண்டியே தபோதனர்கள் வந்துபோற்ற
வேதியர்கள் வேதமெல்லா மவளானுளே. (214)

வேதமென்ற மனேன்மணியா ளவரைக்கொண்டு
மேலான ஆரூரில் தவத்தைச்செய்து
பாதமென்ற யிடபாகப் பேருபெற்று
பதிவான காஞ்சியிலே பரனுருக்காய்
பேதமையாய் வாழைப்பந் தலிலேவந்து
பெரியதவஞ் செய்தல்லோ யிருந்தவல்லி
பாதமூர்த்தி பரமனுக்குத் தேவியானுள்
பச்சைவல்லி யென்றவளைப் பகரலாமே. (215;

பகரலா மென்றுசொன்ன குருவேஅய்யா
பரசமைய மாறதனில் நின்றரூபி
மணியணியாய் நின்றவல்லி யவளைக்காண
மணியரன மணியாட்டம் வந்திதேது
கனியான ராசிபனி ரெண்டுமேது
கதிர்காணு அலகைபல பேர்தானேது
துணியான கந்தையது வந்ததேது
துணிந்துபல பெலிகளது கொடுப்பதேதோ. (216)

வதென்று கேட்பதற்கு யின்னங்கேளு
யெளிதான யெல்லம்மை யென்பதாரு
வாழிதென்ற அவள்நீலி காளியாரு
வழிமறித்துப் பூஜைகொள்ளும் பகவதியுமாரு
மாதென்று பூமியிலே மல்லாரிகொட்டு
மாரியென்ற வாசலிலே நிற்பதாரு
காதென்று மூக்கென்று மிருப்பதென்ன
களரிசெய்து பூஜைபோட்டுச் செய்வதேதோ. (217)

போடுவது மென்னவென்று கேட்கவந்த
புலத்தியனே சொல்லுகிறேன் கேளுகேளு
ஆடுகின்ற மணியாட்ட மம்பரமேயாச்சு
அதைச்சேர்ந்த விபரமின்ன மரையக்கேளு
நாடுகின்ற ராசியடா செய்குறிகளாச்சு
நல்லதுணி கந்தையடா வேதமாச்சு
போடுகின்ற பெலியல்லோ பெருமையாச்சு
போக்கறியார் மூலமென்று புகழுவாரே. (218)

மூலமென்ற திருமூல மல்லகண்டாய்
மூக்கண்ணி யுட்கூத்து முனிவராட்டு
காலமென்று லதிகாலம் பூஜைவேணுங்
அன்னியென்ற யெழுவருவே பரசமையமாச்சு
ஆலமுண்ட கண்டரிட மொருத்தியாச்சு
ஆதியவ னிரணியனைக் கொன்றபோது
தாலமென்ற ஜெகந்தனிலே யுதிரபெலிவாங்கத்
தாயார்தன் வாசலிலே நின்றுள்பாரே. (219)

பெதிரான அவதாரந் தேசத்துள்ளே
யெங்களுட தேவியுட னிருந்துபின்னும்
சதிரான கதிர்சாய்ந்த உலகத்துள்ளே
கம்பத்தி னடியில் நின்றுன் கரியமாலும்
சதிரான பெலியுமடா முப்பெலியும்வாங்கிச்
சந்தியிலே மடிந்தவர்க்குச் சாவுமில்லை
அதிரான அடிபட்டுச் செத்தபேரும்
ஆத்துமத்தைக் குறியாத அலகையாமே. (220)

அலகையென்று மானிடரை மிரட்டிப்பின்னும்
ஆக்கிரமித்துப் பற்கடித்துப் பெலியும்வாங்கி
பலகையென்ற பலஹூரு மயத்துகாளில்
பலசமய மார்க்கமதைப் பார்த்துப்பின்னும்
அலகையென்ற ஆருன சமையந்தன்னில்
அக்கினியாம் வீரனென யிருக்கவென்றார்
சலகையென்ற அக்கினியும் படியுமானுள்
சஞ்சலங்கள் தீர்க்கவல்லோ தாயார்பாரே. (221)

தாமான மூலத்தைச் சொல்லக்கேளு
        தனியாலிற் பள்ளிகொண்டான் தாயாராகும்
பேயான அலகையுடன் கூத்துமாகி
        பெரியதெய்வ மென்றுமவள் பேருபெற்று
காயான காஞ்சிகா மாட்சியானுள்
        கார்காலந் தன்னிலே மாரியானுள்
பாமான உலகதனிற் பத்தினியுமானுள்
        பரசமைய மாறுக்கு ளிருந்தாள்காணே. (222)

மிருந்தவிடங் காணுதற்கு அச்சஞ்சொல்லும்
        மீறென்று வேதமதி லிருந்தசத்தி
மீருரு சமயமதி லிருந்ததெங்கே
        மிருந்தவிட மெந்தனுக்குக் காட்டவேணும்
மிருளிருக்குங் கோலமஞ்சச் சொல்லவேணும்
        மின்னதென்று அடியேர்க்கு மியம்பவேணும்
மிருந்திதங் காட்டியே சொல்லவேண்டா
        மியல்பான குருசாமி மிறைஞ்சினேனே. (223)

மிறைஞ்சவே மின்னமொன்று சொல்லக்கேளு
        மியல்பான சட்டைமுனி பேரைச்சொல்லும்
மறைஞ்சகனி மின்னதென்று வருத்துச்சொல்லும்
        மாரியென்ற மாயுகளில் வந்ததென்ன
ஆன்செபலா யல்லாது வேறுமுண்டோ
        அம்பிகைதன் னருளான விபரமென்ன
காஞ்சபின்பு மிரக்கமென்ன காண்பதென்ன
        காசினியோர் தன்பகட்டைக் காட்டுவீரே. (224)

காட்டாத பொருள்களெல்லாங் காட்டச்சொன்ன
        கருத்துள்ள புலஸ்த்தியனே கூறக்கேளு
மூட்டாத கம்பளி யதனைப்போர்த்தி
        முதல்வனுந் நின்றவனே தெய்வமாச்சு
மாட்டாத நவசித்தர் வைத்தபேரு
        மாரியென்ற வைசூரியது நானேயென்றுள்
கூட்டாத அக்கினியே சட்டைமுனியாச்சு
        கூடிநின்ற கைப்பிடியே மிரமங்காணே. (225)

பிரமமென்ற அபாலமடா ஆத்தாள்பீடம்
பிரசமைய மாறுக்கும் ஒருத்திதெய்வம்
கருமமென்ற பூமியிலே மாசியானாள்
காமாட்சி யானவளு மவளேயானாள்
வருமமென்ற வெல்லம்மை யவளுமாச்சு
வழிமறித்த பகவதியு மவளுமாச்சு
தருமமென்ற பச்சையுமே அவளுமப்பா
தாணியிலே யிராற் சமைமங்காணே. (226)

கர்ணனென்று பெந்தனுடன் சொல்லவந்த
காரணசற் குருவேயான் கருதக்கேளீர்
ஊனென்றுங் கங்கைநதி யாடவென்று
உலகிலுள்ள மானிடர்கள் போவதேது
மானென்ற விழியான கன்னிதானும்
மதத்தாலே நீர்தனிலே மூழ்குமேது
தேனென்ற மொழியுடையா ளாத்தாள்தானும்
தெளிவான தெளிவெடுத்துக் காட்டிடவே. (227)

காட்டவே யின்னமொன்று கருதக்கேளீர்
கள்ளநதி யேழுமங்கே பிரவேசித்து
நாட்டினில்கா தன்சடைமேற் கெங்கையாரு
நாட்டிலுள்ள மானிடர்க்கு மோட்சமேது
பூட்டாகப் புதுமைகளைக் காட்டவந்தீர்
புவியிலே அய்யனாரும் ருத்திரனும்
காட்டவே யிதுபுதுமை காட்டவேணும்
கருத்துள்ள சீடரவர் மகிழத்தானே. (228)

தானாக நின்றவன்றன் சிரசுமீதில்
தனியான கெங்கையுடன் கதிருஞ்சாத்தி
ஊனான உடலுக்குள் ளிருந்தாரீசன்
உண்மையா யிதனுடைய உணர்வுகேளு
மானாக யிடப்பாகம் வைத்தாரய்யா
மானிலத்து மானிடர்க்கு மதுவேயாச்சு
வானான சிவனேவல் கேட்டவேகம்
வழியான சத்திநதி சாற்றக்கேளே. (229)

சாற்றவே வினைதீர ஸ்நானஞ்செய்து
　　தாரணியில் மூடருக்குக் கங்கைகதியப்பா
ஆற்றவே யவளிடத்தில் வந்ததோஷம்
　　அப்புறத்தே போகாமல் முழுகவந்தாள்
தூற்றவே கெற்பமென்ற தோஷந்தீரச்
　　சுந்தரியாள் நீராடித் தூரநின்றாள்
பார்த்தபேர் பயப்பட்டுத் தூரநிற்கப்
　　பைங்கிளியாளதுகண்டு பதுங்கினாளே. (230)

பதுங்காத மலர்தன்னைச் சொல்லக்கேளீர்
　　பரவைமரம் பிர்மமடா பார்த்துக்கொள்ளு
ஒதுங்காத மலருருத்ரன் அனந்தனுக்கும்
　　ஒத்துப்பார் பிரபஞ்ச வாழ்க்கைதன்னை
பதுங்காத ஞானவழி யேறுயேறு
　　பஞ்சமா பாதகரி னுறவுதள்ளு
திதுங்காதே சத்தகதி பிறப்புயெந்தன்
　　தன்பொதிகை மலையல்லால் வேறுமுண்டோ. (231)

வேரடா யென்மலையிற் பிறந்ததீர்த்தம்
　　வெளிகண்டு யேழுமக்கே பிரவேசித்து
காரடா குருபதத்தைப் பனிரெண்டாண்டு
　　கருணையுட னுந்தனுக்குக் காட்டுவார்கள்
பாரடா ஜெகசாலக் கூத்தைமைந்தா
　　பழிபாவம் வாராமற் பாருபாரு
ஆடா யெனைப்போலே சொல்லப்போறார்
　　ஆச்சரிய மிந்தநூல் முற்றும்பாரே. (232)

யெந்தனுட் னூல்பார்த்து யிருந்தபின்பு
　　வெளிதாக நூல்தோறும் பார்க்கவேணும்
மைந்தனே யென்மகனே சொல்லக்கேளு
　　மச்சமுனி சொற்படிக்கு நடக்கவேணும்
நந்தனா ரெந்தனுக்குச் சொன்னவார்த்தை
　　காண்பதென்ன காணுமந்தப் பருபதந்தனில்
பந்தான மாதர்கள் தன்னைச்சேர்ந்தால்
　　பழிபாவ மெத்தவடா பாருபாரே. (233)

பாரிலே கடப்புபல விதங்களாகும்
பழிகாரப் படுகுழியிற் றள்ளுவார்கள்
ஆரிலே நீராடப் போறேனென்பான்
அவர்கள் செய்யுங் கருமங்க ளறியமாட்டான்
பேரிலே பிரபலமா யிருப்பாரப்பா
பெரும்பாவஞ் செய்வார்கள் பேருள்ளோர்கள்
காரிலே மூலத்தவிதை தன்னைக்காணார்
கசடர்கள்தன் னுறவாலே கலங்குவாரே. (234)

கலக்காமற் பூசாரி பெயரைக்கேளு
கருத்துள்ள மானிடரி லொருவரப்பா
மலக்காமல் மாரியைத்தான் மனதில்வைத்தான்
மகத்தான பூசாரி யென்பாரப்பா
தலக்காமற் தேவரிஷி சித்தர்போற்றும்
தாய்பதத்தி லனுதினமுங் கார்க்கவேணும்
அலங்காத தீபமதை யறியவேணும்
அப்பவல்லோ பூசாரி யென்னலாமே. (235)

எண்ணாமல் மானிடர்க ளுலகுதன்னில்
எண்ணியெண்ணி எளிதாகப் பூஜைசெய்வார்
கண்ணான கங்காளி வீரபத்திரன்
கருத்துள்ள செயமுனிவர் தன்னைக்காணார்
கையுடுக்கு விபரமதைக் காணாரப்பா
கன்னியிலே நிகர்சொல்லத் திறமுங்காணார்
மண்ணான மணிச்சிலம்பின் பெயரைக்காணார்
மந்தையிலே மாடுமேய்க்கு மனிதர்தானே. (236)

மார்க்கமாய்ச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
மண்டபத்தில் தேவதைகள் வெவ்வேறப்பா
ஆர்க்குமே தெரியாது யிந்தக்கேள்வி
அவனிதனில் வீரனெல்லாந் துஷ்டனாகும்
கார்க்கவே வைத்ததொரு அட்டகாளி
காசினியிற் துஷ்டர்களை யடக்கிக்கொண்டு
பார்க்கவே பிரபலமா யிருந்துபின்னும்
பதிகார்க்க வேணுமென்று யிருந்தவாரே. (237)

பிருந்தாக்கா லொன்றுமில்லை யேகவெளியப்பா
　　யிருகையுஞ் சிவமொன்று சத்தியொன்று
மருந்தான தேகமடா மாயக்கூத்து
　　மயக்கத்தால் கோடிஜன மிளந்தாரப்பா
அருந்தாத கனியதுவே யிந்தக்காயம்
　　அம்பலத்தான் கூத்தடா அறிந்துபாரு
பொருந்தாத விடம்போலே பொய்களவுநீக்கி
　　பொல்லாப்பு ஒருநாளுஞ் செய்யவேண்டாம். (238)

செய்வினையே பிறப்புமாந் தெளிந்துபாரு
　　செய்கால ருத்திரனே புண்யமாச்சு
கைவினையாய்ச் செய்ததெல்லாங் கருமமாகும்
　　காசினியில் மாயவனே கர்த்தனாகும்
ஐவருமே பலவிதமா யிருந்தமார்க்கம்
　　அம்பிகையாள் தன்னருளால் வந்தபாலை
மைவிழியாள் தன்மாய்கை யற்றுப்பின்னும்
　　மகாதேவர் தன்னருளை வணங்குவீரே. (239)

வணங்காத பேர்கள்தனை வணங்கவேணும்
　　வணங்கினா லின்னாலை வணக்கவேணும்
யிணங்காம லொருவருக்குச் சொல்லவேண்டாம்
　　யிப்புவியிற் சிறுமைந்த னுறவுதள்ளு
அணங்கனென்ற மாரனுட மாய்கைதள்ளு
　　அரன்பாத மாயிபதம் பணிந்துபோற்று
யிணங்கவே யின்னமொன்று சொல்லக்கேளு
　　யிதையறிந்து நடந்தவனே ஞானிதானே. (240)

ஞானியென்று லோகத்தில் மெத்தவுண்டு
　　நல்லிணக்க மில்லாதான் ஞானியல்ல
கானிகொண்டு கோடிதந்து திரியவேண்டாம்
　　காசினியில் மெத்தவடா கண்டுபாரு
தானியத்தில் வித்தாக யிருந்தயீசன்
　　தனையறிந்து மார்க்கமதைக் காணுகாணு
பேணியே ஒருவருடன் பேசவேண்டாம்
　　பேச்சாலே ஒன்றுமில்லை பிழைக்கத்தானே. (241)

பிழைப்பதற்கு வேணுமென்று சொல்லவந்த
பெருந்தமிழில் வல்லவரே சொல்லக்கேளீர்
அழைப்பான அஞ்செழுத்துப் பிறந்ததெங்கே
ஐம்பத்தோ ரட்சரமும் பிறந்ததெங்கே
மழைப்பதற்கு மந்திரந்தான் பிறந்ததெங்கே
மாசில்லான் தன்கையிலே மழுவதெங்கே
வழைப்பதற்கு விந்துவது வந்ததெங்கே
வழியாக விபரமாய் வழுத்திடீரே. (242)

விபரமினிக் கேட்கவந்த பிள்ளாய்கேளு
விதமான அஞ்செழுத்து விந்துவாச்சு
தபரமே தத்துவந்தான் தொண்ணூற்றாறும்
• தவஞானி கண்டதடா அகாரத்துள்ளே
பவரமினிச் செய்யாமற் குருவைக்காரு
பதிவான பிரணவத்தில் பின்புகாட்டு
மகரமினி மீனமதா யிருந்தமார்க்கம்
மகாதேவ ரெழுத்தாலே மழுவைத்தாரே. (243)

வாமியிவள் மார்க்கமிது ஐம்பத்தொன்றும்
வரையேழுங் கடந்தபே ரின்பமப்பா
காமியிவள் வெகுகாமி கன்னிகன்னி
காமனுக்குத் தாயான ஐம்பத்தொன்று
ஆமிவளை யறிந்தாக்கா லெல்லாங்காணும்
அவளுடைய பிரதமையே யெல்லாமாச்சு
தாமிவளைப் பூஜைபண்ண வெல்லாங்காணும்
தாயைவிட்டாற் பிரபஞ்ச மில்லைகாணே. (244)

இல்லாம லிருப்பதற்கு வியல்புகேளு
இயல்பான பூஜைபடா சிதம்பரமேயாச்சு
சொல்லாமற் சிவபூஜை செய்யவேணும்
சோதித்துச் சிவனடியை வணங்கவேணும்
நில்லாமல் கெடுமேச்சை யடக்கிப்பாரு
நிலைக்குமடா தவமுனக்கு நேர்ந்துபாரு
கல்லாமற் கற்பவற்கு யிந்தஞானம்
கருதவே தோணுமடா கண்டுகொள்ளே. (245)

கண்டுகொள் ளென்றுசொன்னேன் புலத்தியாகேள்
கமலத்தில் பிரமன்வந்த விதங்கள்சொல்வார்
காணாத காட்சியடா பரமஞானம்
கலந்தாக்கா லப்போது தெளிவுகாணும்
பூணாத பொன்னணிந்து வருவான்பாரு
பொய்மாய்கை யென்றதெல்லாம் பொய்யதாமே
வீணான மாய்கையினில் விழாமல்தானே
விரும்புகின்ற சூட்சமதே மாய்கைதானே. (246)

மாய்கையென்ற சூட்சத்தை மருவிப்பாரு
மனையாட்டி யாசைதனை மறந்துபாரு
ஆகையா லாகாமிய மொடுங்கவேணும்
அறுமறையி லுள்ளபடி உரைத்தேனப்பா
பாகையுண்ட பியதுபோற் பறக்கவேண்டாம்
பஞ்சமா பாதகத்தை மறந்துநீயும்
யீகையென்ற அறமதுவே தத்தளிக்கப்பண்ணி
யிருந்தயிடங் காணியடா யியம்புவேனே. (247)

இயம்புவே னென்றுசொன்ன குருவேஅய்யா
யெளியேனு னேசிறுவ னேதுங்காணேன்
பாம்புமேல் பள்ளிகொண்டான் றனக்குயெட்டுப்
பாரியென்று சொன்னவகை பகரவேணும்
காம்பணைய தோளார்தன் மாய்கையெல்லாம்
கண்ணனுட மாய்கையது யென்றதேது
சாம்பசிவன் நிரந்தரமாய் நின்றநிலைசொல்லும்
சர்ப்பத்தில் விஷம்வந்த வார்சொல்வீரே. (248)

விசமென்ற மாய்கையது பெண்ணதாச்சு
விமலனுட திருக்கூத்து விளங்கப்போமோ
கசமென்ற குழிதனிலே விழுந்தமாந்தர்
கருதுவார் பலவிதமாய்க் கண்டுபாரு
வசமென்ற ஞானத்தைக் கண்டபேர்கள்
வழிவசத்தைக் காண்பார்கள் மற்றோர்காணார்
மசகமென்ற கொசுப்போலே மயங்கவேண்டாம்
மதியிரவி யற்றபிர்ம யோகம்பாரே. (249)

யோகமென்றால் சிவயோக முண்மையாச்சு
ஒத்துநின்ற கிரிகையடா யோகவாழ்க்கை
பதகமென்று விடப்பாகம் பெற்றாளாத்தாள்
பதியறிந்து நின்றவனே சிவயோகியப்பா
ஆகமபு ராணமெல்லா மவனேயாச்சு
ஆதியாய் நின்றசத்தி யவளுங்கூட
ஆகமத்தைப் பேசிவைத்தா ரீசன் தானும்
அப்படியே உலகமது நடந்தவாரே. (250)

நடந்தவா ரென்றுசொன்ன நாதாகேளீர்
நானிலத்தில் விருதுபதி னெட்டுஞ்சொல்லும்
நடந்தோர்சொற் கவிசிதறு மெழுத்துஞ்சொல்லும்
கைலாச மேருவென்ற வரையுஞ்சொல்லும்
படர்ந்தகொடி கபருக்கும் பம்பைக்குந்தான்
படியான டப்பைக்கு மெழுத்துச்சொல்லும்
வுடம்புனரு முடலுக்குங் கிடுகிட்டிக்கும்
வளமைபெற்ற சவுரிக்கு மெழுத்துமுண்டோ. (251)

முதலான ஆலயமாங் கோவிலுக்கு
முன்னின்ற பீடத்தி னெழுத்தைச்சொல்லும்
அதிலான பாவையொடு பீடத்துக்கும்
அம்மனுக்குந் தீபக்கா லெழுத்துஞ்சொல்லும்
மதிலான பிரகாச மட்டதிக்கும்
மறையோதும் பூரிக்கு மெழுத்துச்சொல்லும்
காதலாங் கன்னியர்க்கு மோகத்தாலே
கைப்பிடிக்கு மெழுத்ததனைக் காட்டவேணும். (252)

மாட்டினதோர் வளையமடா அகாரமாச்சு
மருவிநின்ற குஞ்சமடா பிஞ்சமாச்சு
காட்டினதோர் விருதெழுத்து யிகாரமாச்சு
கடுத்துநின்ற சலவிருது அதின்பிஞ்சுமாச்சு
ஆட்டியதோர் மணியல்லோ உகாரமாச்சு
அதில்நாவு டன்கூடப்பிஞ் செழுத்துமாச்சு
கூட்டியதோ ரெழுத்தாலே மணிகள்சேர்த்துக்
குடங்களை மாலையிட்டார் முருகன்தானே. (253)

தானென்ற குறவருக்கு மணிகள்சேர்த்துத்
தனிக்காட்டில் குடியிருக்க வைத்தாளாத்தாள்
ஊனென்ற உடலெழுத்துத் திபக்காலாச்சு
உத்துநின்ற பம்பையடா ரீங்காரமாச்சு
பானென்ற வளையமடா சங்றீங்காச்சு
பதிவான குச்சிருடா ஓங்காரமாச்சு
ஆனென்ற ஆணுவத்தைப் புடைத்தபேர்க்கு
அடக்கமல்லோ ரகசியங்க ளானவாரே. (254)

வாருகொண்டு பிறுக்கியல்லோ மேளந்தன்னை
வையகங்கள் தானதிர மூழக்கமிட்டு
பேருகொண்ட சேகண்டி யடிப்பதேது
பெலமான காதாக்கள் முழக்கஞ்சொல்லும்
ஆருகொண்டு அம்பலத்தி லாடும்போது
அவருடைய தன்காலில் சலங்கையேது
ஊருகொண்டு சொல்லாமல் வென்றுசோம
ஹுணற்சிலம்புக் கோர்வையுட பெழுத்துச்சொல்லே. (255)

வீரான வீராப்பு யேழுமாச்சு
விதமான அகாரமடா அதுவேயாச்சு
ப்ரரான சேகண்டி இகாரமாச்சு
பறையெழுத்தும் பரனுமக்கே கூடிநின்றார்
வாரான யெழுத்தல்லோ யெட்டுமாச்சு
வட்டமென்ற காகமடா கயாதாச்சு
கூரான சலங்கையடா ஐந்துமூன்றும்
கூடிநின்ற யெழுத்தாலே யெல்லாமாச்சே. (256)

ஆச்சடா அகாரமுத லைம்பத்தொன்றும்
அறிவான மூலமடா ஐந்துஐந்து
பேச்சடா பிரணவமு மைந்துமாச்சு
பேசரிய மந்திரமு மதுவேயாச்சு
காச்சடா பாலதுக்கு மோர்தெளித்தாப்போலக்
கண்ணுக்குள் மணியான கருத்தைப்பாரு
நீச்சடா நிலைகாணுக் குருடருக்கு
நிலவரத்தைக் கண்டவர்கள் நிசங்காட்டாரே. (257)

நிசமான பூரணமே தெய்வமென்றும்
நிலையான பஞ்சகர்த்தாள் நீதியாகும்
கெசமான கெசமல்லோ சமுசாரவாழ்க்கை
கிரிகையோர்க் கிதுவேணும் கிலேசம்வேண்டாம்
பசமான பாசமது பற்றிற்ருனல்
பதிகெதிக்கு வழியில்லை பாருபாரு
வசமான மாயையதைத் தள்ளவேணும்
வழிபாடு கண்டுமெள்ளத் தேறுதேறே. (258)

தேறுமென்று பெந்தனுக்குச் சொல்லிவந்த
தெளிவுதா னின்னதென்று காட்டவேணும்
காறுமென்று சொல்லாமல் கருத்தைச்சொல்லும்
கரைகாணும் பேரின்பங் கண்டகாதா
கூறுமென்று னடியேன் கேட்கவர்தேன்
குருவென்றுஞ் சீடரென்ற வெழுத்தைச்சொல்லும்
மாறுமென்ற வெழுத்ததிலே உண்டோசொல்லும்
மாதவத்தில் சத்திநின்ற வகைசொல்வீரே. (259)

வகையான வகையின்னம் வணக்கக்கேளீர்
வயிரவனர் காவலென்ற மார்க்கஞ்சொல்லும்
துகையறிந்து தோத்திரங்கள் செய்வதேது
துரைத்தனஞ் செய்கின்ற வெழுத்தைச்சொல்லும்
பகையான பகையறிந்த வெழுத்துஞ்சொல்லும்
பழிகண்ட வழிபாடு வெனக்குச்சொல்லும்
தகையான தகையறிந்த எழுத்தைச்சொல்லும்
தனித்தனியே வெளியெங்கே காட்டுவீரே. (260)

காட்டுமென்று பெந்தனைக் கேட்கவந்த
கருத்துள்ள சுந்தரமே கருதிக்கேளு
பூட்டுப்போ லிருந்துலக வாழ்க்கையப்பா
பொய்யென்று வெண்ணியே தள்ளவேணும்
மாட்டுமே லேறுமந்த யீசன்ருனும்
மதிரவியாய் நின்றதுவுங் கண்டுநீயும்
நாட்டிவைத்த மரந்தனக்குத் தாயைப்போலே
நானிலத்தோர் தங்களுக்கு யீசனுச்சே. (261)

ஈசான்ய முதலாக யெட்டுத்திக்கும்
இருப்பவனே யொருவனப்பா வியல்பாய்க்கேளு
மாசான மோரெழுத்தில் முடிந்ததப்பா
மனோன்மணியா ளொத்தனக்கு மகிழ்ந்தவார்த்தை
ஆசானும் சொல்வதல்லால் மற்றோர்சொல்லார்
அவனிதனில் கல்விகளு மதிகமுண்டு
கூசாம லொருவருக்குஞ் சொல்லவேண்டாம்
கூருகெட்டார் தன்னுறவு தள்ளுதள்ளே. (262)

கண்ணுக்கு ளொருவனின்ற நிலையைக்காட்டும்
கருவிலே துன்பமென்ற கருவைக்காட்டும்
மண்ணுக்கு ளொருவனுமாய் நின்றநாதன்
மதிகெட்டு மதியான வாறுஞ்சொல்லும்
விண்ணுக்கு ளொருவனுமா யிருந்தமூர்த்தி
விதிதனக்கும் மதிதனக்கும் விபரங்காட்டும்
பண்ணுதமி ழாராய்ந்த குருவேசாமி
பரகெதிக்கு ஒருவனல்லால் வேறுமுண்டோ. (263)

பரகெதியைக் காண்பதற்கு விபரங்கேளு
பாரிலுள்ள தேவதையைப் பூஜைபண்ணி
பரகெதிக்கு ஆளாக யிருந்தாயானுள்
பட்சம்வைத்து யென்குருவும் பகர்வாரப்பா
பரகெதிக்கு வழிகாட்டுந் தெய்வங்கேளு
பட்சம்வைத்து வீரபத்திரன் வடுகனோடு
பரகெதிக்கு யிவர்கள்முத லைந்துபேரும்
பாரதனிற் குண்டலியும் பகர்ந்திட்டேனே. (264)

திட்டமாய்ச் சொல்லுகிறேன் யின்னங்கேளு
திரிகால பூஜையடா தேவபூஜை
வட்டமாய் வளையமிட்டு அறுகோணமிட்டு
வாசலிலே காவல்வைத்து வணங்கவேணும்
அட்டமா சித்தோடு அனேகம்வித்தை
அவள்காட்டி வழிகூட்டி ஆட்டங்கொள்வாள்
பட்டமரம் பால்சொரிய வைத்தாள்கன்னி
பழிகாரி தனைப்பணிந்து மாதங்காணே. (265)

பாதமது பணிவதற்கு பின்னங்கேளு
 யரிபாஷை தனைமறந்து பணியவேணும்
வேதமது காணுதா ருறவுதள்ளு
 வெள்ளாட்டிப் பயல்களைநீ சேர்க்கவேண்டாம்
தாதமது வல்லவடா தாயைப்போற்று
 தையலர்க ளுறவாமோ தாணிமீது
மாதமதி லேயொருநாள் மைந்தாகேளு
 மாசில்லா மணியாள்தன் னுள்ளமாமே. (266)

தாமெனவும் பேரெனவும் நின்றநாதன்
 தரணியி லேழுக்கு மொருவனுனேன்
தாமெனவும் நின்றசதா சிவனுமானேன்
 சாரமெல்லாம் நிறைந்துநின்ற பரமஜோதி
பூமெனவு மிவ்வாரி லொருவனுனேன்
 புண்ணியனை யென்னாளும் புகழவேணும்
நாமெனவு மஞ்செழுத்தைப் பணியவேணும்
 நல்லகெதி யடைவதற்குப் பாதையாமே. (267)

பாதையறிந் தேகடந்தால் பலனுங்கிட்டும்
 பழிபாவ மேதுமில்லை பரனைக்கண்டால்
கோதையரைச் சேர்ந்தாக்கா லேதுமில்லை
 கொடும்பாவங் கிட்டுமடா கூர்ந்துபாரு
சதையறிந்த ஊனதுபோல் தயங்கவேண்டாம்
 சமுசார மாயமெல்லாந் தள்ளவேணும்
கதையறிந்து மலகைபோற் கலங்கவேண்டாம்
 காசினியிற் பொருள்தேடிப் புதைத்திடாதே. (268)

காசிமுதல் கன்னிவரை தெய்வமுண்டு
 கலந்துநின்ற வகையடா கண்டுபாரு
தாதிமக னொருவனல்லோ தாரைக்காண்பான்
 தற்கமிட்ட சுந்தரமே சொல்லக்கேளு
ஆசுகவி பாடுவோர்க்கு மோட்சமில்லை
 அரிஅரா வென்பவர்க்கு மோட்சமுண்டு
வாசிதனில் ஒளிந்தோர்க்குச் சயுட்சியங்காட்டும்
 வழிபாதை யிதுவல்லோ வணங்குவாயே. (269)

வணங்கென்று சொல்லவந்த குருவேயப்பா
வழிகண்ட தேவதைக்கு உயிருண்டோசொல்
லெனக்கவே யெந்திரங்க ளுண்டோசொல்லும்
யேகாட்சர பூரணமு மெழுத்துஞ்சொல்லும்
அணங்கலைப்போ லலங்கரித்துத் திரிவதேது
அன்னைபிதா யிருவரென்ற மார்க்கமேது
மணங்கண்ட தெய்வமதை மறந்துமின்னும்
மாகினுக் கண்டதுஞ்சொல் வணங்குவேனே. (270)

வணங்குதற்கு விபரமினிச் சொல்லவேணும்
மைந்தனே சொல்லுகிறேன் மருவிப்பாரு
அணங்கனுட தனுப்போலே கீறிக்கொண்டு
ஆதித்தன் வளையமொன்று அதிலேகீறி
அணங்கென்ற வெழுத்திலே யிட்டுப்பின்னும்
அப்பனே சூலமிட்டு ரீங்காரமிட்டு
பூணங்கள போருதென்று பார்க்கவேண்டாம்
பாலோடு பலகாரம் வைத்துப்போற்றே. (271)

போற்றியபின் வீரணங்கே கிர்த்தஞ்செய்வான்
பொல்லாத வினைகளெல்லாந் தீர்ந்துபோகும்
மாற்றியே அறுகோண மிட்டுநீயும்
மைந்தனே வளையமிட்டுச் சூலங்கட்டி
நாற்றிசைகொண் டடஞ் றெழுத்தைப்போட்டு
நால்வாச விட்டல்லோ நடுவேகேளு
தாட்டிமையாம் ஐமூன்று வெழுத்தைக்கூட்டி
தருவென்ற வாரீதனை நடுவேவையே. (272)

நடுவிருக்த பாரிதனைப் பூஜைபண்ணு
நாட்டில்ஜீவ காருண்ய னென்றுசொல்ல
படுபாவி யானுக்கால் பழிப்பனப்பா
பரமசிவ னடியார்கள் பூஜிக்கமாட்டார்
கடுகடுத்த முகம்வெறுத்துக் காட்டுந்தெய்வங்
காளியடா அட்டசித்தி கண்டுபாரு
வெடுவெடுத்த ரூபமடா வேதனையும்
வேதாந்த சிரோன்மணியா ளாத்திரள்கூத்தே. (273)

ஆத்தாளைப் பூஜைபண்ண அறிவுவேணும்
அறிவில்லா மூடருக்கு அதிர்ஷ்டமில்லை
பாத்தானே மூப்புசத்தைத் தீயதாகப்
பழிகாரி கண்ணிலேதான் படவும்வேண்டாம்
சேத்தானும் பேயிலையவள் வருவாள்பாரு
வேடங்கள் மாறியல்லோ மாசியானுன்
மாத்தாளைக் கண்டவர்கள் மதிக்கமாட்டார்
மகாராசி வடிவெல்லாம் மாயக்கூத்தே. (274)

கூத்தான ஆத்தாளைப் பூஜைபண்ண
குருவென்றுஞ் சீடனென்று மிருக்கவேணும்
காத்தான அலகைபடா லோகவாழ்க்கை
கண்டோர் பிரபஞ்சம் விண்தாச்சு
வேதாந்தங் கண்டாக்கால் வேதஞ்சொல்லும்
வேதாந்த சிரோன்மணியாய் விளக்கவேணும்
பார்த்தாலோ சிறுபிள்ளை பிராயம்பத்து
வக்குவத்தை யின்னதென்று பகரொண்ணாதே. (275)

ஒன்றான பிஸ்பரிசைத் தியானம்பண்ணி
ஓதுவான் காரானன் ஊக்கமயாகு
கண்ணான கன்னிகம்பி விருத்தினன்னி
காட்டுவாள் கன்னிசொல்லக் கண்டுபாரு
புண்ணான பூனைவரைச் சேர்த்தாயானால்
பூருவத்தில் தெய்வமெல்லாம் போய்விட்டுப்போச்சு
பெண்ணென்று பிசிரில்லை யுனக்குமைந்தா
வெதிசிவுட பேவல்பிள்ளி வெகிரிக்போச்சு. (276)

பேச்சடா மாங்கைபென்ற ஓதல்லாம்போச்சு
பொன்மாரி பக்தனுக்கு கிருத்தஞ்செய்வாள்.
வச்சடா பேரின்ப மூர்த்தனுக்கு
வழிவாசல் கண்டாக்கா லெல்லாங்காணும்
ஆச்சுதடா பிறைப்வழித்தா லவமாய்ப்போவாய்
அனேகர்மம் விட்டுமடா அழிந்துபோவாய்
காச்சுதடா பேரின்ப மூர்த்தனுக்குக்
கரைசேர வழிசொல்வேன் காணுக்காணே. (277)

காணவே யின்னமொன்று கருதக்கேளு
கன்னியரைப் பூசிக்க மந்திரங்கேள்
பூணவே ஆபரண மெல்லாம்பூட்டி
பூஜைபற்குக் கெந்தமரி மளங்கள்சாத்தி
காணவே ஆறுவங்க ளெல்லாம்யோக்கி
நம்மங்சிங் வங்பங்ஜபுங் கிலியுஞ்சவ்வும்
ஸ்ரீங்றீங்றுங்றங் மாதரிவீரி வயிரவிசண்டி சாமுண்டி
கெவுரிவுச்சாடனி உச்சாடுஉச்சாடுவென லச்சமோதே. (278)

லெச்சமடா பட்சம்வைத்து ஓதுநீயும்
நிலவரமாய் ரேசகத்தில் நில்லுநில்லு
அச்சரமாய் ஐஸ்வரியங் கொடுத்துப்பின்பு
அம்பலத்தான் தெரிசனமுங் காட்டுவார்பார்
பூச்சம்வைத்து உன்னிடத்தி லிருப்பாளாத்தாள்
பழிகாரி தனைக்கண்டால் பாவம்போச்சு
நிச்சயமா யுந்தனுக்குச் சொல்லிவிட்டேன்
நிலவரத்தைக் கண்டறிநீ நிசஞ்சொன்னேனே. (279)

நிசமான யென்குருவே சாமிநாதா
நீறணிந்தோ னட்சரத்தி லென்னஆகும்
பசமான பாசமதை நீக்குமோசொல்
பாசவினைக் கொடுமையெல்லாந் தீர்க்குமோசொல்
வசமான ஞானவெளி தங்குமோசொல்
வழிபாதை தீர்க்கமதைக் காட்டுமோசொல்
கசமான மறலிதனை யகற்றுமோசொல்
கசடறுட் வுறவுவிட்டுப் பணிந்தேன்சீடன். (280)

பணிந்தவொரு சீடனையே பார்த்துப்பின்பு
பாலகனே யென்மகனே யென்றுசொல்லி
கனிந்தவொரு கண்மலரி னைசாற்றிப்பின்பு
கனியான நீற்கனியே சுந்தரமேஅய்யா
அணிந்தவொரு ஐந்தெழுத்தா லெல்லாந்திரும்
ஆத்மாவி லைந்தெழுத்துங் கலந்திருக்கும்
அணிந்தவொரு நீறுமடா ஐந்தெழுத்துமாச்சு
அம்பலத்தி லாடினத அஞ்சமாச்சே. (281)

ஆச்சடா அரனெழுத்தால் வினைகள்தீரும்
அம்பலவ ருந்தனுக்கு அருள்கொடுப்பார்
பேச்சடா பேய்த்தனமா யிருக்கவேண்டாம்
பெண்ணரவங் கடித்துதென்றல் பிழைக்கமாட்டாய்
காச்சடா தியானத்தா லிருவரையுங்காச்சு
கண்மூடித் திறக்குமுன்னே காட்சிகாணும்
வாச்சுதடா உந்தனுக்குப் பேரின்பமப்பா
வழிகாட்டி உந்தனுக்கு வழிசொன்னேனே. (282)

வழிகாட்டு மென்குருவே அய்யா அய்யா
வழக்குண்டு மெந்தனக்கு முந்தனக்கும்
பழிகாட்டும் பெண்ணுணைச் சேர்ந்தபின்பு
பரகதிக்கு வழியில்லை யென்றதேது
சழிகூட்டுஞ் சதாசிவனு ராட்டமென்றும்
சாற்றினீர் முன்புமே சாற்றப்போமோ
அழிகாட்டுந் தடக்கையான் யெம்பிரானும்
ஆத்தாளை யிடப்பாகம் வைத்ததேதோ. (283)

யேதென்று யெந்தனைக் கேட்கவந்த
யென்மகனே சுந்தரமே சொல்லக்கேளு
போதென்ற பெண்ணுமேல் பொறிகலங்கிப்போகும்
பொக்கிஷத்தின் மேலாசை யதிகமாகும்
வாதொன்று மில்லையடா வழிகாணமாட்டாய்
வழக்குவேண் டாமினிச் சொன்னேனையா
மாதென்ற பொன்னுமேல மாண்டுபோன
மானிடர்கள் மெத்த மெத்தவுண்டு மருவிப்பாரே. (284)

மருவாம லிருந்தாக்கால் மனம்பொங்காதே
மானிலத்தில் மானிடர்கள் பெருக்கமேது
பெருகாமற் போனுக்கா லுலகமேது
பெம்மானை யார்கண்டு தொழுவேயோளுர்
சருவாம லிருந்தாக்கால் கால்வழியேபொங்கி
சஞ்சலங்க ளுண்டாக்கும் சாமிநாதா
அருகாகி யணையாம லறிவுகாட்டும்
ஆத்தாளைப் பூஜைசெய்ய அருள்செய்வீரே. (285)

அறுகாமல் விந்துதனை யுணரவேணும்
    அவனியோர் செய்தரும மறக்கவேணும்
பருவரைப் பெண்ணாசை மறக்கவேணும்
    பக்குவத்தை யின்னதென் றறியவேணும்
அருவமாய் நின்றெழுத்தைக் காணவேணும்
    ஆத்தாளைப் பூசைபண்ண அறியவேணும்
பருவமாய்ப் பூசையிலே மனதைவைத்துப்
    பராபரையை யனுதினமும் போற்றுவாயே. (286)

போற்றுமற் போற்றுதற்கு விபரஞ்சொல்லும்
    பொறியைந்தும் புலனைந்து மெழுத்துங்காட்டும்
ஆத்தாளைக் காண்பதற்கு விபரஞ்சொல்லும்
    அம்பலவர் பதம்போற்ற விபரஞ்சொல்லும்
பார்த்தாலே சிறுபிள்ளை யென்பதுவுஞ்சொல்லும்
    பரகெதிக்குப் பரனிருந்த விபரஞ்சொல்லும்
மாத்தாலே லோகமெங்கு மதியாக்கன்னி
    மாமறையுங் காணாத விபரஞ்சொல்வீரே. (287)

விபரமென்ன பூருவத்திற் சொன்னேனப்பா
    விளக்கமே முக்காண்டங் கொங்கணவர்சொன்னார்
கபரமென்ன ரிஷாக்களவருக்குங்
    காட்டினார் வேதமுனி கண்டுபாரு
கபரமென்ன காகமென்ன கோடாகோடி
    காட்டினார் நூல்தோறுங் கண்டுபாரு
விபரமென்ன பூரணத்தை யோட்டினாக்கால்
    வேதாந்தத் திறவுகோ லிதுக்குள்ளாச்சே. (288)

ஆச்சென்று பெத்தனுக்குச் சொல்லவந்த
    அப்பனே யென்குருவே அன்பாய்க்கேளு
மூச்சென்ற பீடமறிந்தா லெல்லாஞ்சித்தம்
    மூலத்தில் நின்றசிவ மெல்லாந்தோணும்
பேச்சென்ற மௌனமு மிருந்தபேர்க்குப்
    பெருவெளியில் ஞானமது தங்கும்பாரு
காச்சியதோர் கனியறிந்த பட்சிபோலே
    கலந்தேற வழிகாணுங் கண்டோரே. (289)

பார்க்கவே முனிவரவர் பாடும்நூல்கள்
பலவிதமாய்ப் பாடியல்லோ பாழாய்ப்போச்சு
பார்க்கவே பலவிதங்க ளாகப்பாடிப்
பண்டிதற்குக் கைக்குறிப்புக் காட்டினார்பார்
பார்க்கவே நூல்காட்டிப் பகர்ந்தாப்போலப்
பாடவில்லை யென்றுசொல்லப் பழித்தார்மாண்பர்
பார்க்கவே யென்னூலைப் பார்க்கவேணும்
பரியாச மென்றுசொன்னால் பாழாய்ப்போச்சே. (290)

போச்சென்று செல்லாம லிருந்தாரீயும்
பொய்மாய்கை யென்பதெல்லாந் தன்னுதன்று
ஆச்சென்ற மனதுறைத்து நின்றபானுல்
அம்பலத்தான் பதஞ்சோ அறிவுதோணும்
மூச்சென்ற நிரேகமடா விந்தவாழ்வு
முன்னில்லை பின்னில்லை மூச்சல்லபாரு
பாச்சென்ற பாழ்மாய்கை யெல்லாங்கோகப்
பராபரையைப் பூசித்தும் பலனேக்கண்ணே. (291)

பலனென்ன விப்பூசை பலனேப்பாரு
பரதேசிக் காவலனைப் பணிந்துநீயும்
பலனென்ன பாக்கியத்தை பார்ண்டபேர்க்குப்
பலன்கிட்டு மென்பார்கள் பாரின்மீதில்
பலனென்ன வேதாந்தம் பார்த்தபேர்க்குப்
பலனுண்டு பரியாசம் பகரப்போமோ
பலனென்ன தேவதைக்குப் பகரவேண்டாம்
பரதேசிக் கன்னமது புசிக்கவேணும். (292)

வேணுமென்று யெந்தனுக்குச் சொல்லவந்த
வேதாந்த சிவமயமே விளம்பக்கேளீர்
காணுமென்ற ரூபமெல்லா மழிவதேது
கன்னிவசம் மணவாளன் கடம்பனுமோ
தோணுமென்ற ரூபவல்லி வேதாந்தமெங்கே
தொல்புவியை அளந்தவருந் தானுமெங்கே
நாணுமென்ற நாதனங்கே யிருந்தவீட்டில்
ஏமழிவாய் சென்றெழுந்து [illegible] (293)

மறைந்தவகை முன்சொன்ன மார்க்கங்கேளு
மறைநான்கு மறியாத வயலொன்றுண்டு
கறைந்தவெள்ள முருவான கரிசல்குள்ளே
காசினியில் யாவருங்கை தொழுதகாட்டில்
வறைந்தமல ராயிரத்தெட் டிதளுக்குள்ளே
வரும்வெள்ளம் வரும்வழியே லிங்கமாச்சு
குறைந்தமதி நிறைந்தவித மிதனுக்குள்ளே
குறையில்லாப் பூரணமே தெய்வமர்ச்சே. (294)

தெய்வமடா தெரிசனத்திற் கண்டபோது
தேவரொடு முனிவர்களுங் காணமாட்டார்
கவ்சமடா கைவல்யந் தன்னைப்பாரு
கருத்திலே தோணுமடா கண்டுபாரு
சைவமடா சாயுட்ச பதவியாகும்
சகலருக்குந் தெய்வஞ்சண் முகனுமாச்சு
யெய்துமடா பேரின்பக் கணையினாலே
பிதமறியா மூடர்களை யெய்துபாரே. (295)

யெய்துபா ரென்றுசொன்ன குருவே அய்யா
யெக்கிலக் துயரமெல்லாந் தீருமோசொல்
வயதுமே பத்தான கன்னிதானும்
வையகத்தி லடிமையெனக் கொள்வதெப்போ
செய்துபா ரென்றுமே சொல்லவேண்டாம்
செய்கரும மெந்தனுக்குச் சொல்லவேணும்
மையதுபார் காமனுட பாணந்தானும்
மார்பில்தைக் காமல்மனம் காட்டுவீரே. (295)

மனங்காட்டு மென்றுசொன்ன மகனேகேளு
மறைநான்குமறியாத மகாதேவர்தானும்
தனங்காட்டுந் தலங்காட்டு மித்தநூலில்
தவத்தினுட மகிமையெல்லாந் தானேகாட்டும்
வனங்காட்டு மனங்காட்டும் வறுமைநீங்கி
வாதத்தி லாசைவைத்தாள் வறுமைகாணும்
செனங்கெட்டுத் தடங்கையா னெம்பிரானும்
சிவன்செயலாம் வேறுண்டோ செப்வொண்ணாதே. (297)

செப்பொணு தென்றுசொன்ன குருவேஅய்யா
செபங்கொண்டக் கினியேந்தித் திரிவதேது
கப்பொணு தென்றுசொன்ன கெவுரிதன்னை
கழுத்திலே அணிந்ததென்ன கருத்தைச்சொல்லும்
திப்பொணு தொன்றுமில்லை யுலகுதன்னில்
தவருமல் நானடியேன் கேட்கவந்தேன்
ஒப்பான தென்றறிந்து அடியேற்கிப்போ
ஒளியாம லின்னதென்று காட்டுவீரே. (298)

காட்டுமென்று யெந்தனையே கேட்கவந்த
கருத்துள்ள சுந்தரமே கேளுகேளு
சாட்டவே சாகரங்க ளேழுமாச்சு
சமையமென்ருல் குறிப்புக்கு அருத்தமாச்சு
வேட்டவே வேசியர்போ லலையவேண்டாம்
வேதாந்த சிவமயத்தின் பாதம்போற்று
ஆட்டவே அருந்தவத்தோர் தனக்குத்தெய்வம்
அய்யன்தான் கலங்கண்டால் பலன்காண்பாரே. (299)

உரைத்தமொழி வேதனுட யாகசாலை
ஒருவருக்கு மாகாத வேதனுடு
மறைத்தமொழி மஞ்சளடா மாசியானல்
மகாதேவ ரெந்தனக்கு மகிழ்ந்தவாக்கு
வரத்தைமொழி பலவிதங்கள் பேசினுப்போல்
பாடினு ருலகத்திற் கோடாகோடி
தரத்தைமொழி கேட்டிருந்த தந்தைபோல
தற்கமிட்ட சுந்தரமே பொருத்தேனப்பா. (300)

பொருத்தேனென் றுரைத்தபுண்ய மூர்த்திஅய்யர்
பொக்கிஷத்தைக் கேட்டாலும் பொருமைவேண்டும்
வருத்திவைத்த வருத்தமெல்லாந் தீர்வதற்கு
வந்தாண்ட குருநாதா அடியேனுக்கு
பொருத்திவைத்த தீபமது நாட்டினுப்போல்
பொருளறிந்து யெந்தனுக்குச் சொல்லவேணும்
கருத்தறிந்த வுடலுக்குள் காயமானுப்போல்
காட்டவே வேணுமையா கைலைநாதா. (301)

கைலையிலே கண்டதொரு கர்த்தன் தானும்
கார்வண்ணன் மாயத்தில் வந்ததேது
கைலையிலே தான்பிறந்த முருகர் தானும்
கன்னியரை மாலையிட வந்ததேது
கைலையிலே வைத்திருந்த காவற்காரன்
கண்ணனுக்குப் பகையாளி யானதேது
கைலையிலே கண்டதொரு கரியமாலும்
கருங்கடலிற் பள்ளிகொண்ட கருத்துஞ்சொல்வீரே. (302)

கருத்தாலே சனடியேன் கேட்டுவந்தேன்
கற்பனையை யின்னதென்று கருதவேணும்
கருத்தாலே கேட்கவந்த சுந்தரமேகேளு
கைலமகா மேருவிலே கர்த்தன்கூத்து
கருத்தாலே கண்டவர்க ளொருவரில்லை
காசிமுதற் கன்னிவரை யாத்தாள்கூத்து
பொருத்ததொரு பொருமையினு லெல்லாங்காணும்
பொதிகைதனிலேதுங் கலங்காமல் நிலையில்நில்லே. (303)

நில்லாமல் மேருதனிற் றவசியாகி
நிலைகாணுச் சமுத்திரத்தை நீஞ்சிநீங்கள்
கல்லாமற் கற்றகல்வி யார்க்குமுண்டோ
கருங்கடலில் கார்வண்ணன் பிறப்பதேது
அல்லாமல் வேதனுக்கு அரிதந்தையேது
ஆலமுண்ட கண்டருக்கு மாத்தாளுக்கும்
சொல்லாமற் பெரியதாய் வந்ததேது
சொர்க்கமென்ற வீடுதனைக் காட்டவேணும். (304)

வெல்லவே யிதையறிந்து உரைத்தகாதா
வேதனுக்கு நால்சிரசு வந்ததேது
அல்லாம லாலிலையில் துயின்றதேது
அலைகடலி லேயமுர்தங் கடைந்ததேது
வெல்லாமல் வேதனுக்குத் தெய்வமாரு
வேதாந்த சிரோன்மணியே குருவேசொல்லும்
சொல்லாம லிதையொளித்தால் தர்மமாமோ
சொற்பெரிதாய் நின்றதொரு மூலனுதா. (305)

மூலத்தே நின்றதொரு சத்திதானும்
முக்கண்ண ரிடபாகம் வந்ததேது
ஞாலத்தைப் படைத்ததொரு யீசன்றனும்
ஞானியற்குத் தெய்வமது வானதெங்கே
ஆலத்தைக் யுண்டசதா சிவன்தனக்கு
அக்கினியாங் கண்வந்த விபரஞ்சொல்லும்
கோலத்தைக் கொண்டதொரு அத்தர்தானும்
குமரனைப் பெற்றதொரு விபரஞ்சொல்லும். (306)

சாலத்தைக் கண்டதொரு சாம்பான்தானும்
சத்தியென்ற மார்க்கமதைப் பார்க்கவேணும்
வேலத்தைப் படைத்தயீசன் கையிற்சூலம்
வேதனும் ருத்திரனு மானதெப்போ
சீலத்தைச் சிவாயகம யென்றநாமம்
திரிபுரைக்குஞ் சீஷனுக்கு முண்டோசொல்லும்
சேலொற்ற கண்படைத்த பேதையற்குச்
சிறையிருந்தால் மதிநின்ற யிடஞ்சொல்வீரே. (307)

நின்றவிடம் போனவிடம் நிலையைச்சொல்லும்
நிராமயமாய் நின்றதொரு யெழுத்தைச்சொல்லும்
கண்டவிடம் பூரணத்தின் கலையைக்காட்டும்
கற்புடைய மங்கையற்குத் தெய்வமாரு
உண்டவிடம் உறங்குமிட மிரண்டுஞ்சொல்லும்
ஊமையென்ற யெழுத்திலே கலந்ததெப்போ
அண்டவிட மில்லாத அகாருக்கு
அரண்மனையும் பெருந்தவசும் வந்ததேதோ. (308)

கண்டவள்ளி தனைக்கார்க்கும் கணபதிக்குக்
காலகண்டன் தகப்பனென்று சொல்வதேது
கண்டவிடந் தனில்துயின்ற திருமாலுக்குக்
கன்னியர்க ளெட்டான விதத்தைக்காட்டும்
அண்டவிட மில்லாத அந்தரத்தில்
அருந்தவத்தோர் நின்றதொரு நிலமைசொல்லும்
அண்டுமிட மறிந்தவனே தெய்வமாகும்
அருந்தவத்தோர் கரணத அய்யன்தானே. (309)

அய்யனே யென்குருவே யாகுமாகும்
ஆதார மானசிவந் தன்னைக்காண
அய்யனே தினமுமணி பூஜைபண்ண
அருந்தவத்தால் கண்டவர்கள் சொல்வாரப்பா
அய்யனே அருந்தவத்தோர் தெய்வமாகும்
ஆறணிந்தோன் மகிமைதனைக் காணப்போமோ
அய்யனே ஆதார மானோர்காணும்
அவரவற்குத் தெய்வமென்ற தான்தான்பாரே. (310)

பாரென்று யெந்தனுக்குச் சொல்லவந்த
பரதேசி காவலனே பகரக்கேளீர்
பேரொன்று மில்லாத தேவருக்குப்
பேர்வந்த விபரமதைப் பிரிக்கவேணும்
ஆரென்றந் தீயென்று மாவதேது
அம்பலத்தான் சடைதனிலே யிருப்பதேது
காரென்று கலப்பைமுனை தன்னைக்காக்கும்
கார்முகில் மேனியனார் கண்ணர்தாரோ. (311)

தாரென்ற மாலைதனை யணிந்தயீசன்
சாம்பல்மேல் பள்ளிகொண்ட விபரமென்ன
பேரென்ற பேர்கள்வந்த விபரமென்ன
பேசரிதாய் நின்றதொரு நிலையைச்சொல்லும்
ஊரென்றந் தேசமென்றுஞ் சொல்வதென்ன
உற்றோர்கள் தெய்வமாய் வந்ததேது
சீரென்றும் வரிசையென்றுஞ் செப்பொண்ணாத
ஜெகசாலக் கூத்தையினிச் செப்புவீரே. (312)

கூத்தான வீராப்பு மெத்தப்பேசும்
கூருகெட்ட மானிடர்க்குக் குருவைச்சொல்லும்
ஆத்தாள்தன் பூஜையிலே வைத்தவஸ்து
ஆதரவாய் வைத்திருந்த சத்தியாரு
காத்தான்தன் ரூபமதைக் காணுமற்றான்
கலங்கிநின்ற மார்க்கமதைக் காட்டவேணும்
மாத்தான மாரணத்தின் பேரைச்சொல்லும்
மணிக்கைகுறி காட்டிநிற விபரஞ்சொல்லே. (313)

சகுந்தான்றன் பூஜையொன்று சொல்லவேண்டும்
சஞ்சலங்க ளறுத்த சாமிநாதா
தோத்தாத வீராப்புச் சொல்லவேண்டாம்
தொல்புவியி லுள்ளபடி துலங்கவேணும்
தீத்தாத வீடுகட்டி வைத்தபேர்க்குத்
திருவுளத்தின் மகிமைதனைக் காட்டவேணும்
நாத்திசையுங் கொண்டாடுந் தாமாரு
நல்லகெதி தருஞ்சாமி நவிலுவீரே. (314)

சாமியென்ற பிரணவத்தின் தெய்வமாரு
சரஸ்பதிக்குத் தகப்பனார் தாயுமாரு
வாமியென்ற வாமமது வந்தவாளும்
வன்னியுட தாய்தமரு மிளைக்குச்சொல்லும்
மாமியென்ற மாதினுட மாமனாரு
மகாதேவர் தனக்குமொரு தெய்வமுண்டோ
பூமியென்ற மாதுக்குத் தெய்வமாரு
பூதலத்தில் புண்ணியரே புகலுவீரே. (315)

காமியென்ற கன்னிக்குக் கணவனாரு
கைப்பொருளில் லாதார்க்குத் தெய்வமாரு
சோமனென்ற சந்திரனுந் தேய்ந்ததெப்போ
சொற்பெரிதாய் நின்றவிடந் தன்னைக்காட்டும்
பாமியென்ற பரமகளை யிடத்தில்வைத்த
பரமசிவ னென்றவரை யளித்ததாரு
வாமியுட வேலனுக்குத் தந்தையாரு
பழுதறவே யெந்தனுக்குப் பகருவீரே. (316)

பகரவே பாசாசினுட தெய்வமாரு
பாரளந்தான் தாயாரு தகப்பனாரு
மகரமென்ற மீன்தனக்கு ரக்ஷியாரு
மகரபல ஜீவருக் காதாரமாரு
நகரமென்ற வீட்டுக்குத் தெய்வமாரு
நாற்றிசையும் வெவ்வேறா யிருப்பதென்ன
சிகரமென்ற கோபுரத்தில் வாழ்ந்தபொம்மை
சமந்தவகை யெந்தனக்குச் செப்புவீரே. (317)

செப்பாத செப்படி வித்தையேது
    ஜெயஜெயா வென்றதற்கு விபரமென்ன
தப்பாமற் றாதுவென்ற புவிதனக்குத்
    தமிழறிந்த யென்குருவே சாமிநாதா
குப்பாமற் கூப்பிக்கும் பிட்டதாரை
    குருவுக்குக் குருவிருப்பா ரென்பதாரு
அப்பாம லப்பில்நின்ற தெய்வமாரு
    அறுசமையக் கோளனென்ற தாரைச்சொல்லே. (318)

கோனறிந்து சொல்லவந்த குருவேசாமி
    கொம்பனையாள் தனையீன்ற தந்தையாரு
பாழறிந்த பெரியோர்கள் நின்றதெங்கே
    பரமனென்ற பிரமனுக்குக் குருதானாரு
தேனறிந்த விஷந்தனக்கு உறவுமுண்டோ
    தெளிவான ஞானவெளி காண்பதாரு
ஆளறிந்த மங்கையரைச் சேர்ந்தபேர்கள்
    அம்பலத்தி லாடுகிற ஆட்டங்காட்டே. (319)

ஆட்டமென்று லைங்பூத அறிவுகூட்டம்
    ஆனதொரு தத்துவத்தி லடக்கிப்போட்டீர்
கூட்டமென்ற கூட்டமெல்லாங் கூரைநீர்கள்
    குறமகளைக் கைப்பிடித்த மார்க்கஞ்சொன்னீர்
பாட்டமென்ற பாட்டெல்லா மிதுக்குள்சொன்னீர்
    பரமசிவன் தன்னருளைப் பகரவேணும்
நாட்டமென்ற யிருகண்ணில் விபரஞ்சொல்லும்
    நல்வழிக்கு மார்க்கமதை நடத்திடீரே. (320)

தீயான அக்கினிக்குத் தந்தையாரு
    திரிபுரத்தார் செய்தவத்தின் தெய்வமாரு
காயான பெண்ணுரு கனியுமாரு
    கலந்துநின்ற உலகத்துக் காதாரமாரு
பேயான அலகைக்கு ஆதாரமாரு
    பேசறிய மந்திரத்திற் குயிருமாரு
நாயான கோபமது நின்றதெங்கே
    நல்லகெதி தந்தசிவ மய்யா அய்யா. (32

அய்யனே யென்குருவே சாமிநாதா
அற்புதமே யென்னரசே அமரர்கோவே
மெய்யான பொருளேமே தினியோருக்கு
மேன்மைபுரி தேசிகனே குருவேசாமி
மெய்யனே உலகமெங்குஞ் செனித்தநாதா
மேலான தமிழுக்குப் பிறந்தமூர்த்தி
கய்யனே உனைத்தொழுது பணிந்துநின்ற
காலோன் செய்தபிழை கார்த்திடீரே. (322)

கார்க்கவே கிடனென்று காலில்வீழ்ந்தேன்
சடநான் செய்தபிழை யெல்லாங்காரும்
பார்க்கவே பரம்பொருளைப் புகரவேணும்
பாவிநான் செய்தகுற்ற மெல்லாங்காரும்
ஆருக்குந் தெரியாது யிந்தமார்க்கம்
அசடனுன் தற்கமிட்டு அறிந்துகொண்டேன்
தீர்க்கவே யெந்தனக்குத் தெரியச்சொன்னீர்
திரிபுரையாள் அருளெனக்குத் தெரிவிப்பீரே. (323)

தெரியாமல் நானடியேன் செய்தகுற்றம்
தெளிவுள்ளோர் பொருத்திடுவீ ரெம்பிரானே
அரியாமற் செய்தபிழை யெல்லாங்கார்த்து
ஆளடிமை கொள்வதற்கு அடியனுனேன்
பரியாமல் ஒருவருடன் பகாமல்தான்
படித்தவற்கு யிந்தநூல் பலிக்குமப்பா
தெரியாம லாருக்கு மீய்ந்தாயானல்;
தேசத்தில் நாய்போலத் திரிவார்முற்றே. (324)

## அகஸ்தியர் தற்க சாஸ்திரம்

முற்றிற்று.

# 'அகத்தியர் பாடிய கோர்வை நூல்'

## ஓலை யேட்டுச் சுவடிகளிலிருந்து புதிதா யச்சிட்டது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அகத்தியர் | பரிபூரணம் 1200. | (அச்சில்) | | |
| 2. | ஷை | மணக்கோலம் 200, | | | |
| 3. | ,, | கனகமணி 100, | | | |
| 4. | ,, | வைத்தியக் கோவை 125, | | | |
| 5. | ,, | வைத்தியத் திரட்டு 81, | 2 | 0 | 0 |
| 6. | ,, | மாந்திரீக இரகசியம் என்னும் கிரிகை 64 ஆக ஐந்து சாஸ்திரங்கள் | | | |
| 7. | ,, | கௌமதி நூல் 400. | 2 | 0 | 0 |
| 8. | ,, | தற்க சாஸ்திரம் 300. | 1 | 8 | 0 |
| 9. | ,, | கற்ப மூப்புக் குரு நூல் 100, | | | |
| 10. | ,, | மனோன்மணி தீட்சை 100, | | | |
| 11. | | நாற்பத்துமுக்கோண பூஜை 41 சேர்ந்தது | 1 | 8 | 0 |
| 12. | ,, | பூரணம் 216. | 1 | 8 | 0 |
| 13. | ,, | பூரணம் 205ம், | | | |
| 14. | ,, | அதற்கு சூஸ்திரம் 21 சேர்ந்தது | 1 | 8 | 0 |
| 15. | ,, | பரிபாஷை 300. | 1 | 8 | 0 |
| 16. | ,, | பன்னிரு காண்டம். | 1 | 8 | 0 |
| 17. | ,, | பூஜாவிதி 200ம், | | | |
| 18. | ,, | ஞான சைதன்யம் 51 சேர்ந்தது | 1 | 8 | 0 |
| 19. | ,, | வகார சூஸ்திரம் 200ம், | | | |
| 20. | ,, | அதன் சுருக்கம் 100 சேர்ந்தது | 1 | 8 | 0 |
| 21. | ,, | தத்துவம் 300. | 1 | 8 | 0 |

ஷை 21 சாஸ்திரமும் சேர்ந்த கோர்வை (ஸ்டாக் இல்லை.)

இன்னும் அனேக சித்தர் சாஸ்திர புஸ்தகங்களும் யாகோபு பாடிய நூல்களும் கிடைக்கும் நேரிலும் தபால் மூலமாயும் பெற்றுக் கொள்ளலாம் விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பக்கூடும்.

ஜி. **இராமசாமிக்கோன்,**

புத்தகசாலை குருசாமிக்கோனார் சந்து வடக்குமாசி வீதி, மதுரை.

திருவள்ளுவர் கற்பப்

7-சாஸ்திரங்கள் சேர்ந்தது

இதில் காதாந்தசாரம் 100, கற்பக்குரு நூல் ... திரம் 30, வாத சூஸ்திரம் 16, முப்புக்குரு ..., வை... திரம் 100, ஆக 7-சாஸ்திரங்கள் ஞானவெட்டி ... சூஸ்திரமாகப் பாடியது இதில் குருநீர், செயநீர், பூநீர் முடிக்கும் வி...முப்பூ இன்னதென்ற விபரமும் வழலை மார்க்கமும் தெளிவாய்க் கூறியுள்ளது

நவம பதிப்பு விலை ரூ 3—.00

போகர் கற்பம் 300.

இதில் அமுரி கற்பம் சாப்பிடும் விதமும் சாப்பிடும் போது புளி உப்பு போகம் கூடாதென்ற காரணமும் அதில் ஏற்படும் குற்றங்களை நிவர்த்தி செய்யும் வகையும் கருநொச்சி, கருநெல்லி, கருந்துளசி இவைகளை நாமே ... டாக்கும் முறையும் பத்திய முறைகளும் ...றியிருக்கி...

விலை ரூ. 2

கருவூரார் நொண்டி யென்னும்

வாத காவியம் 700.

இதில் கற்பம், வாதம், யோகம், ஞானம், வயித்தியம், முதலியதை நொண்டிச்சிந்தாகவும் மற்றும் பல சிந்தங்களாகவும் பாடியிருக்கிற... முக்கியமான நூல்.

நவம் பதிப்பு விலை ரூ 2—50.

அகத்தியர் கற்பமுப்புக் குருநூல்.

இதில் கற்பவிதிகளும் முப்பூ விவரமும் பற்பம் செந்தூரம் சுண்ணம், மெழுகு, தைலம், ...கைபாகஞ் செய்பாக முறைகளும் ...ற்பத்தி முக்கோ... ...ஜாவிதிகளும் அடங்கியது. விலை ரூ 1—7...

---

குரு இராமசாமிக்கோன்.

புத்தகசாலை, 4 நெ. குருசாமிக்கோனர் சந்து,

வடக்கு மாசி வீதி, மதுரை.